சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு சித்திரைமாதம் 8-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 14-ம் இலக்கம்

# செஞ்சீனாவில் பயங்கர பஞ்சம்

நாடுகடத்தப்பட்டுப் போர்மோசாவில் வசித்துவரும் பெக்கிங் அதிமேற்றிராணியாரான கருதினால் ரியென் ஆண்டகை அவர்கள் பயங்கர பஞ்சத்தால் வாடும் செஞ்சீனமக்களுக்கு உதவிகோரி உலகமக்களிடம் விண்ணப்பிக்கும்படி அருளப்பபாப்பரசரைக் கேட்டுள்ளார். மக்கள்பசியால் மடியாதபடி பாப்பரசர் "உதவியளிக்க வழிதிறக்கும்படி" செஞ்சீனாவைக் கேட்கவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். போர்மோசாவிலுள்ள கத்தோலிக்க பங்குகளில் பஞ்சநிவாரண நிதி சேர்க்கும்படி கருதினால் ஆண்டகை கட்டளையும் விதித்துள்ளார்.

உக்கிரேனில் ஏற்பட்ட பெரும் பஞ்சம் சோவியற்ஆட்சி பத்தாண்டுகள் நிலவிய பின்னரே உண்டானது. சீனாவில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்சமும் அத்தகையதே. அதனால் பொதுவுடைமைப் பிடியிற்சிக்குண்டமக்கள் முதல்பத்தாண்டுகள்வரை குபேரராய்ச் சீவிக்கிறார்கள் என்பதற்கில்லை. உடன்பிறக்கும் நோய்போலப் பஞ்சமும் பொதுவுடைமையோடு கூடிப் பிறந்தது.

1921-ம்ஆண்டு வத்திக்கான் அரசகருமாதிகாரியாயிருந்த கருதினால் கஸ்பாறி ஆண்டகைக்கு 15-ம்ஆசிர்வாதப்பர் மேல்வருமாறு எழுதினார்: "சரித்திரத்தில் நாமறிந்த ஆபத்துக்களில் அதிகொடிய ஆபத்தொன்றை நாம் காண்கின்றோம். பஞ்சத்தால் வாடி, கொள்ளை, பெருவாரிக்காய்ச்சலுக்கு இரையாகிய எண்ணிக்கையற்ற மக்கள் வனாந்தரங்களிலே திரிகிறார்கள், உணவு பெறும் நோக்கத்துடன்; அவர்களோ இராணுவத்தாரால் கலைத்து வெருட்டப்படுகின்றனர். மிகவும் கொடுமையான மரண ஆபத்திலிருக்கும் ஆயிரக்கணக்கான வொல்கா மக்கள் உதவி கோரி உலகத்தவரிடம் ஓலமிடுகிறார்கள்."

பஞ்சத்தில் பலரகம். 1920-ம் ஆண்டையடுத்து நடந்த பஞ்சம், போர், புரட்சிகளின் விளைவாகத் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டதாகும். ஆயினும் 1930-ம் ஆண்டையடுத்த காலத்தில் ஏற்பட்ட பஞ்சமோ தற்போது சீனாவிலேற்பட்டிருக்கும் பஞ்சம்போல, பொதுவுடைமைத் திட்டத்தின் விளைவாகும்.

இவ்வுணவுப்பஞ்சம் கூட்டுப்பண்ணை விவசாயத்தினாலேற்பட்டதெனினும் பொதுவுடைமைத் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டியதல்ல எனஎண்ணுகின்றனர். "ஒருநூற்றாண்டுக்குள் கூட நடந்திராத பேராபத்து" எனச்சீன அதிகாரிகளே வர்ணிக்கின்ற தற்போதைய பஞ்சத்தில் 500லட்சம்மக்கள் (சீனாவிலே) உணவுத் தட்டுப்பாட்டால் உலர்ந்து போகிறார்கள். இங்ஙனையில் சென்ற ஆண்டில் 6லட்சம் தொன் உணவுப் பொருட்களை இலங்கை உட்படபலநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாம் செஞ்சீனா. தாய் இண்ணிப்பிச்சை எடுக்க, மகன் கோதானம் செய்தமாதிரி.

**அதிகமான தளங்கள்:**

பாரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கெனச் சோவியற் ருஷியாவிடம் பட்டகடனழிக்க இவை அனுப்பப்பட்டனவாம். மேலும் பொதுவுடைமை ஆதிக்கத்தை நிலைநாட்டும் தளங்கள் அமைக்க, தென்கிழக்கு ஆசியா, தென்அமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற இடங்களுக்கும் அவை சென்றன.

ஆகவே, மேற்கிந்தியநாடுகள் சீனப்பஞ்சத்தைப் போக்க உதவியளிக்குங்கால் அவ்வுதவி செஞ்சீனாவில் உணவின்றிவாடும் சீன மக்களுக்கல்ல, 'முற்போக்கில்'லாதநாடுகளில் பொதுவுடைமை ஆதிக்கம்வளர்க்கச் சீனாவுக்கு உதவவும்கூடும்என எதிர்பார்க்க வேண்டும். விநியோகத்தைப்

[தொடர்ச்சி 3-ம் பக்கம்]

## அங்கிளிக்கன் திருச்சபை

### பரிசுத்தஸ்தானத்திற்கு ஓர் தூதுவரை அனுப்புகின்றது

பரிசுத்த பாப்பரசரால் அண்மையில் நிறுவப்பட்ட கிறிஸ்துவ சபைகளின் ஐக்கியத்துக்கு அடிகோலும் அலுவலகத்தின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கிளிக்கன் திருச்சபையின் வெஸ்ற்மின்ஸ்ரரினதும், யோர்க் நகரினதும் அதிமேற்றிராணிமார்கள் சேர்ந்து அதிவண. பி. சி. பௌலி என்பவரைத் தங்கள் தூதுவராக நியமித்துள்ளனர். இவருடைய நியமனம் புதிய அலுவலகம் தனது தொண்டைச் சரிவரச் செய்வதற்குப் பெரும் உதவியாயிருக்குமென்று வத்திக்கான் பிரமுகர் ஒருவர் கூறினார். எதிர்வரும் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்குச் செய்யப்படும் ஆயத்தங்களைப்பற்றிச் சகல கிறிஸ்தவ சபைகளுக்கும் தகவல்கள் கொடுப்பதும், அவைகளின் கருத்துக்கள் அபிலாசைகளை அறிந்து அவற்றைப் பொருத்தமான ஆயத்தக் குழுக்களுக்குத் தெரிவிப்பதுமே புதிய அலுவலகத்தின் முக்கியவேலைகளாகும்.

# கொங்கோவில் கொம்யூனிஸ்தரின் அட்டூழியங்கள்

இவ்மாகாணத்தின் தலைநகரமாகிய புக்கவுவில் அர்ச். பிரான்சீஸ் சவேரியார் விசாரணைப்பங்கில் பலாத்காரம் நடாத்திய லுமும்பா கட்சி இளைஞர், பெல்ஜியத்தைச் சேர்ந்த றெனே தவொஸ் சுவாமியாரைப் பலவாறாக அங்கவீனமாக்கி, பின்கொலைசெய்தனர்.

ஐம்பது இளைஞரைக் கொண்ட இக்கூட்டத்தினர், மூன்று கொங்கோ குருமார் உட்படப் பத்துக் குருமாரையும், கன்னியாஸ்திரிமாரையும் தடிகள், ஈட்டிகள் கொண்டு பலவாறாகத் தாக்கினர். குருமனையைத் தீக்கிரையாக்கினர். கொங்கோ துருப்புக்கள் அவ்விடம் வந்ததால் மற்றக்குருமாரும், கன்னியாஸ்திரிமாரும் காப்பாற்றப்பட்டு, பட்டாளப் பாடிவீட்டில்புகலிடம்பெற்றனர்.

அப்பட்டணத்து, அர்ச். தெரேசம்மாள் கோவில் தீக்கிரையாக்கப்பட்டது. ஜீப் செலுத்திச் சென்ற ஒரு ஐரோப்பிய குருவானவர் தாக்கப்பட்டு, ஜீப் சுட்டெரிக்கப்பட்டது. 48 வயதினரான காலஞ்சென்ற றெனெ சுவாமியார் 19[illegible] கொங்கோவில் திருவூழியம் நடாத்திவந்தவர். அவரைக் கொலைசெய்தபின், அவர் சடலத்தைக் கண்டதுண்டமாக்கியதுமன்றி, சிரசையும்சேதித்தார்கள்.

கன்னியாஸ்திரிமாரும், வைத்தியமிஷனரிமாரும் தொண்டாற்றிவரும் இருவைத்தியசாலைகளைத் துருப்புகள் காவல் செய்துவருகின்றனர்.

கொங்கோ இளைஞரின் ஒழுக்கத்தை மாற்றுவதும், கிறிஸ்து சமயம் கொங்கோ மக்களில் கொண்டுள்ள செல்வாக்கை அழிப்பதும் பொதுவுடைமைத் திட்டத்தின் அம்சங்களாகும். தம்முன்னோரின் விக்கிரக வழிபாட்டைக் கைக்கொள்ளும்படி இளைஞர் தூண்டப்படுகின்றனர்; சம்பளம் பெறும் புரட்சிக்காரர் கென்னியாவில் தலையெடுத்த "மௌ" "மௌ" இயக்கத்தைப் போன்று இங்கும் தூஷணப் பேச்சும், பரிகாச வழிபாடுகளும் நடத்த ஆரம்பித்திருக்கின்றனர். ஞானோபதேசம் கற்பிக்கும் மரியாயின்சேனையாளர் பலாத்காரமா[illegible]பட்டு வருகின்றனர்.

லேயோப் போல்ட்வில்லில் ஐ. நா. தலைமைக்காரியாலயம் இத்தகைய சம்பவங்களைக் குண்டரின் குழப்படி எனக்கருதுகிறது. குருமார் தூஷணிக்கப்பட்ட பொழுது அருகேநின்ற ஐ. நா. துருப்புகள் வேடிக்கை பார்த்து நின்றார்கள்.

"இளைஞரை எம்பக்கமாக்க வேண்டும்" என்கிறார். மொஸ்கோவில் பயிற்சிபெற்ற, சமூகஇளைஞர் அலுவலகத் தலைவர் அல்பேட்கி சொங்கோ; "அவர்களில் அநேகர் குருமாரைப் பின்பற்றுகிறார்கள்; அவர்களை அப்புறப்படுத்தவேண்டும்." இவ் மாகாணத்தின் பிரதமரான கஷாமுருவுக்கு ஆலோசகராகக் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த கொம்யூனிஸ்தர் ஒருவர் செயலாற்றி வருகிறார். கிழக்குப்பேர்லீனில் மோதகாலமாக விசேஷ பயிற்சிபெற்று நாடுதிரும்பிய திரு. கசாண்டா வித்தியாதிபதியாக அமர்த்தப்பட்டுள்ளார். அவர் மதபாடசாலைகளை எல்லாம் தேசீயமயமாக்கப் போவதாகப் பயமுறுத்திவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் ஒளி

— 2 —

(சா. பே.)

மருத்துவ மனையொன்றில் எனது முதலாவது பிரசவத்தை எதிர் நோக்கியிருந்தேன். வேதனை அதிகரிக்கும் நேரங்களிலெல்லாம் அர்ச். ஜெருட்டின்மேல் வேண்டுதல்களடங்கிய சிறிய செபப் புத்தகத்திலிருந்து சில செபங்களைப் பிரார்த்தித்து ஆறுதலடைவேன். பிரசவிக்கும் தாய்மாரின் பாதுகாவலராக அர்ச். ஜெருட்டைத் திருச்சபை நியமித்திருக்கிறது.

அடுத்த படுக்கையிலிருந்த மங்கையின் நட்பைச் சீக்கிரமே பெற்றேன். நீங்கள் அடிக்கடி வாசிக்கும் நூல் யாது? என வினவினுள் அவள். நான் அர்ச். ஜெருட்டைப்பற்றி விபரித்தேன். கத்தோலிக்கராகிய நீங்கள் உண்பதற்கும், உறங்குவதற்கும்கூடப் புனிதர்களைப் பாதுகாவலராக வைத்திருப்பீர்கள் எனக் கேலிசெய்தாள்.

இருவரும் பிரசவித்தோம். எனது படுக்கையண்டை கொண்டு வரப்பட்டேன். யான் பெற்ற செல்வத்தை அணைத்தவண்ணம் அடுத்த படுக்கையை நோக்கினேன், அங்கும் ஒரு மழலையைக் காணலாமென. ஆயின், தொட்டிலை ஏக்கத்துடன் நோக்கிய என் தோழியைக் கண்டேன். "எனதுகுழந்தை இறந்துவிட்டது; இத்துயரை என்னுல் தாங்கமுடியாது; எனது இன்னல்களைச் சொல்வதற்கு, எனது துன்பங்களில் ஆறுதல் அளிப்பதற்கு இப்போது ஒரு பரலோக பாதுகாவலர் தேவை" எனப் பொருமினுள் என் தோழி.

எனது செபப் புத்தகத்தை அவளிடம் கொடுத்தேன். பிரசவ துன்பங்களினபோது கூறத்தகும் வேண்டுதல்களைப் பல தடவைகள் செபித்து ஆறுதலடைந்தாள். அங்கிருந்த சொற்ப தினங்களிலும் கத்தோலிக்க மதம்பற்றியும் என்னிடம் தெரிந்துகொண்டாள்.

மருத்துவ மனையைவிட்டு நீங்கும்போது எனது முகவரியைப் பெற்றுக்கொண்டாள் அந்நங்கை. ஆண்டுகள் இரண்டு அகன்றன. என் பழையதோழியிடமிருந்து அஞ்சலொன்று பெற்றேன். தனது புதிய செல்வனுக்கு ஜெருட் எனும் நாமத்துடன் ஞான முழுக்கு அளித்திருப்பதாகவும், தான் இப்போது கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவள் எனவும் அவ்வஞ்சலில் குறிப்பிட்டிருந்தாள் அத்தோழி.

— திருமதி எற்வேட் கோல்டேன்

# அர்ச். சூசையப்பர் பந்தியின், 1960-ம் ஆண்டுக்கான
# 53-வது ஆண்டு அறிக்கை

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டி போல் தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் 1960-ம் ஆண்டுக்கான ஐம்பத்திமூன்ருவது ஆண்டு அறிக்கையை எமது சகோதர பந்தியினருக்கும், உபகாரிகளுக்கும், அபிமானிகளுக்கும் மகிழ்ச்சியோடும், தாழ்மையோடும் சமர்ப்பிக்கின்ருேம்.

**அங்கத்தவர்களும் கூட்டங்களும்:** கடந்த வருடத்தில் எமது பந்தியில் 30 அங்கத்தவர்கள் கடமையாற்றினர். கூடப்பட்ட கூட்டங்கள் 44. கூட்டங்களுக்குச் சமுகமளித்த அங்கத்தவர்களின் சராசரி எண்ணிக்கை 18.

**ஞானமுயற்சிகள்:** ஆன்ம சரீர நன்மைகள் செய்யும்பொருட்டு எமது அங்கத்தவர்கள் வறியவர்களின் இல்லங்களுக்கு 1832 முறை தரிசனை அளித்தனர். ஆஸ்பத்திரிக்குச் சென்று 732 நோயாளரைச் சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் கூறிப் பத்திக்குரிய புத்தகங்களும், பத்திரிகைகளும் கொடுத்து உதவியுள்ளனர். சிறைச்சாலைக்குச் சமுகமளித்துக் கைதிகளுக்குப் புத்திமதியும், ஆறுதலுமுரைத்திருக்கின்றனர்.

**இலவச புத்தகசாலை:** எமது பந்தியின் இலவச புத்தகசாலையிலிருந்து 110 புத்தகங்கள் வாசிக்கக்கொடுத்ததுமன்றி, 320 துண்டுப் பிரசுரங்களும், 462 பத்திரிகைகளும் வாசிக்கக் கொடுத்துள்ளோம்.

**அர்ச். அந்தோனியார் தரும அப்பக் காணிக்கை:** வழமைப்பிரகாரம், அர்ச். அந்தோனியாரின் பக்தர்கள் தாங்கள் அர்ச்சியசிஷ்டர்மூலம் அடைந்துகொண்ட நன்மைகளின்பொருட்டுத் தருமத்திற்கு உதவுதற்காக இவ்வருடம் ரூபா 2,856-15சதம் அனுப்பியிருக்கின்றனர். அவர்களின் விசேட கருத்துக்களுக்காகவும், அவர்களுக்கு அளித்த நன்மைகளுக்கு நன்றியாகவும் சபை அங்கத்தவர்கள் அனுதினமும் தனிமையாகவும், கூட்டங்களின்போது ஒருமித்தும் அர்ச். அந்தோனியாருடைய உதவியோடு சர்வ வல்லபரான சர்வேசுரனை 7915 முறை இரந்து மன்ருடியுள்ளனர்.

**பிடி அரிசித்தண்டல்:** சென்ற வருடத்தில் நாம் செய்ததுபோலவே எமது பந்தியில் பிரிக்கப்பட்டுள்ள 8 வட்டாரங்களிலும் சேர்க்கப்பட்ட பணம் ரூபா 337-63 சதம். முன்வருடத்திலும் பார்க்க இவ்வருடம் எங்கள் சபையின் சில சகோதர அங்கத்தவர்களின் ஊக்கக் குறைவால் ரூபா 77-79 சதம் குறைவாகின.

**நத்தால் தண்டல்:** நத்தால் காலத்தில் ஏழைகளுக்கு விசேட உதவிகள் செய்யும்பொருட்டு வழமைப்பிரகாரம் எமது உபகாரிகளிடம் விசேட உபகரிப்புக்குச் சென்ருேம். இவ்வருடம் அவர்கள் தாராள மனதுடன் தந்துதவிய தொகை ரூபா 459-52 சதமாகும்.

**உபகரிப்புகள்:** இவ்வருடம் உபகரிப்புகள்மூலம் கிடைத்த முழுத்தொகை ரூபா 4456-80 சதம்.

இத்தொகைகடந்தவருடத்திலும்பார்க்கக் குறைவடைந்ததைப்பற்றிக் கவலையுடன் உங்களுக்கு வெளிப்படுத்துகிருேம்.

நிற்க, மேற்படி தொகைப் பணத்தைக் கொண்டு 66 குடும்பங்களைக் கொண்ட 174 பேருக்குக் கிழமைவீதமும், தருண உதவியாகவும் ரூபா 2,874-21 சதம் செலவு செய்துள்ளோம்.

இன்னும் வறியவர்களுக்கு வஸ்திரமாகவும், வீடுகள் வேயவும், முயற்சியில்லாதவர்க்குச் சிறு வியாபாரத்துக்கும், அனுதபிள்ளைகளுக்குப் புத்தகம்வாங்கவும் ரூபா 585-60 சதம் செலவுசெய்துள்ளோம்.

**நன்றியுரை:** எமது பந்தியின் வளர்ச்சியை விரும்பி எம்மை ஊக்கித்துவரும் மகாவந். மேற்றிராணி ஆண்டகை அவர்களுக்கும், எங்களை வழிநடத்திவரும் அதிவண. ஜே. புருேகான் சுவாமியார் அவர்களுக்கும், ஒவ்வொரு கூட்டங்களுக்கும் தவருது சமுகந்தந்து கூட்டத்தை நடப்பித்துவரும் வண. எஸ். ஜி. இல்லறி சுவாமியார் அவர்களுக்கும், ஆசனக்கோவில் கட்டளைச்சுவாமியார் அவர்களுக்கும், சகோதர பந்தியினர், உபகாரிகள், அபிமானிகள் யாவருக்கும் எமது தாழ்மையான நன்றி உரியதாகுக.

ஈற்றில் எங்களையும், எங்கள் உபகாரிகளையும் ஆசீர்வ[illegible] ஆன்மசரீர நன்மைகளைத் தந்துதவும் எல்லாம் வல்ல ஏகபரஞ்சுடரை நெஞ்சார வாழ்த்தி வணங்குகிருேம்.

நிர்வாகசபையின் சார்பில்,

**மா. சவிரிமுத்து,** அக்கிராசனர்

**சூ. நீக்கிலாப்பிள்ளை** கௌ. காரியதரிசி

## வரவு செலவுக் கணக்கு
## 2-1-60—4-1-61

### வரவு விபரம்

| | ரூ. ச. |
|---|---|
| 2-1-60-ல் கையிருப்பு | 188-92 |
| மகிமை அங்கத்தவர்களால் | 508-05 |
| காரிய அங்கத்தவர்களால் | 49-33 |
| உபகாரிகளால் (நத். தண்டல்) | 459-52 |
| அர்ச். அந்தோனியார் தரும அப்பக் காணிக்கை | 2,856-15 |
| பிடி அரிசிக் கணக்கால் | 337-63 |
| வேறு தருமம் | 57-20 |
| மொத்தம் | 4,456-80 |

### செலவு விபரம்

| | ரூ. ச. |
|---|---|
| காசாக உதவியது | 2,874-21 |
| வஸ்திரமாக உதவியது | 467-00 |
| அச்சுக்கூலி: (கலண்டர், திப்போட், நோட்டீஸ்) | 203-05 |
| வியாபாரத்துக்கு | 72-00 |
| உபகாரிகள் பூசைக்கு | 30-00 |
| அனுத பிள்ளைகள் புஸ்தகம் வாங்குவதற்கு | 31-60 |
| பத்திக்குரிய துண்டுகள் | 13-50 |
| வறியவர் வீடுவேய | 15-00 |
| S. V. P. உபதேசி சம்பளம் | 600-00 |
| முத்திரை, என்வலப், கடதாசி, மை முதலிய செலவு | 66-48 |
| 4-1-61-ல் கையிருப்பு | 83-51 |
| மொத்தம் | 4,456-80 |

**கே. கே. அம்புருேஸ்,**
**கௌரவ தனுதிகாரி**

# தோலகட்டித் தபசிகளார்
# வண. பி. எ. தோமாஸ்.
## ஓ. எம். ஐ. அவர்கள்

ஆன்மா நித்தியமானது. அழியாதது. ஆன்மா என்று ஒன்று இருக்கிறதா என ஐயப்படுபவர்கள் அறிவின் பிழம்பாக விளங்கும் தோமாஸ் தபசிகளாரைத் தோலகட்டியில் ஒருமுறை தரிசித்தால் நெஞ்சில்எழுந்த ஐயத்துக்கு விடைகாண்பார்கள். மற்ற உலகத்தின் பிரதிபிம்பமாகத் தோன்றும் தபசிகளாரின் ஒற்றைநாடியான, மெலிந்த, தளர்ந்த தோற்றத்தைக் கண்டு அருகிக் கொண்டுவரும் மெழுகுவர்த்தியெனக் கணக்குப் போட்டால நிச்சயமாக ஏமாந்து போவீர்கள்! அவரது இரும்புக் கரங்கள் எம்மை பற்றிய மாத்திரத்திலேயே ஒருசக்தி அவர் கைமூலம் எம்மில் பரவுவதை, இருதயத்தோடு கலப்பதை அதனுல் மனதில் ஒரு திருப்தி, ஒரு தெளிவு ஏற்படுவதை யாரும் புரிந்துகொள்ளாமலிருக்க முடியாது. கண்ணுடிகளுக்கூடாக கருணைபொழியும் கணகளால—துருவிப் பார்க்கும்போது, தேன்சொட்டச் சொட்டப் பேசும்போது, இன்னதென்று விபரிக்கமுடியாத ஒன்று மனத்தின் அடித்தளத்திலே ஊற்றெடுத்து ஆன்மாவோடு இழைந்து, கலந்து, உலகம் என்பது மாய்கை, அநித்தியமானது அழியக்கூடியது;—பிரபஞ்ச வாழ்க்கையின் பற்றுக்கோடாக அமைந்த ஆசை, பற்று, பாசம் ஆகிய இன்னோரன்னவைகளிலிருந்து, அந்த விணுடியில் சற்றே விலகிப்போகிருேம்—இவைபோன்ற எண்ணங்கள் எழுந்து உந்துவதை உணரலாம்.

சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயில முட்டிமோதிக்கொண்டுவந்த நூற்றுக்கணக்கான, பிறசமயப்பிள்ளைகளின் கண்காணிப்பாளராக, அவர் பலவருடங்கள் இருந்தகாலத்தில், அவர்களுக்கு ஓர் யோகியாகவும், முனிவராகவும், ஏன் ஓர் 'மகாத்மா' வாகவும் தோன்றினுர்.

அவரிடம் பரிசுத்த வேதாகமத்தையோ, தமிழ் இலக்கியங்களையோ கற்க வாய்ப்புப்பெற்ற நாம், அவரது அறிவுச் சுடரில் எமது எண்ணத்தின் மாசுகளையும் தூசுகளையும் நீருக்கி எம்மிலிருந்து உதிர்த்துக் கொண்டோம்.

கல்லூரியில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றிருந்த சுவாமிகள் தோலகட்டியில் ஆச்சிரமம் ஒன்று நிறுவுவது காரணமாகக் கல்லூரியைவிட்டுச் சென்றபோது, அதனுல் ஏற்பட்ட காலிஇடத்தைப் பூரணமாக நிரப்பிவிடுதல் சுலபமாகவிருக்கவில்லை.

யாழ்ப்பாண மேற்றிராணியாராக இருந்து மறைந்த அதிவந். கலாநிதி ஜே. ஏ. கியோமர், O. M. I. ஆண்டவர் அவர்கள் 1928-ம்ஆண்டில் பரிசுத்த பாப்பரசரை உரோமை நகரத்தில் தரிசித்துத் திரும்பிய சில நாட்களுள் தோமாஸ்சுவாமி அவர்களை அழைத்து குருத்துவக்கல்வி பெறவிருக்கும் சீடர்கள் சிலருடன் தோலகட்டிக்குப் போகும்படி பணிக்க, அவர்கள் அங்கிருந்த கத்தோலிக்க ஆலயத்தின் பாழடைந்த நிலையிலிருந்த குருமனையில் போயிருந்தார்கள். எளிமையான வாழ்க்கை, செபம்செய்தல், கடும்தவம் செய்தல் ஆகியவைகளே அவர்களின் குறிக்கோளாகும்.

ஞாயிறு, கடன்திருநாட்கள் தவிர்ந்த ஏனையநாட்களில் செபமாலை நோன்பு நோர்ப்பார்கள். வறுமையின் எல்லைக்கோட்டில் நின்றுவாழும் இவர்கள், இறைச்சி, மீன், முட்டை, புகையிலை, போதைதரும் குடிவகைகள் தவிர்ந்த ஏனையவைகளையே உண்பார்கள்.

செபமாலைச்சபையில், தற்போதுள்ள ஐந்து ஆச்சிரமங்களில் ஐந்து குருமார்களும் எண்பது சந்நியாசிகளும் இருக்கிருர்கள். இந்த ஆச்சிரமங்களுள் இரண்டு வடஇலங்கையிலுள்ள தோலகட்டி, அச்சுவேலி ஆகிய இடங்களிலும், எஞ்சியமூன்றில் ஒன்று வடஇந்தியாவிலுள்ள அம்பிகாபுரியிலும், மற்றைய இரண்டும் தென்இந்தியாவிலுள்ள வடக்கன்குளம், மனப்பரை என்ற இடங்களிலும் இருக்கின்றன.

வசாவிளான், தேவத்தை, (ருகமா) வடக்கன்குளம் என்ற இடங்களிலுள்ள கன்னியாஸ்திரி மடங்களில் சிலநூற்றுக் கணக்கான செபமாலைக்கன்னியாஸ்திரிகள் இருக்கிருர்கள்.

"எழுபத்தைந்திலும் தளர்வில்லை" வண. தோமாஸ்சுவாமி அவர்கள் 1886-ம்ஆண்டு பங்குனி மாதம் 7-ந் திகதி யாழ்ப்பாணத்தில் (சுண்டிக்குளியில்) பிறந்தார். சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்று, பொது எழுதுவினைஞர் பதவியில் நியமனம் பெற்றவர் கத்தோலிக்கமதக் குருவாவதற்காக அப்பதவியை விரைவில் துறந்தார். 1912-ம்ஆண்டு தைமாதம் 6-ம்திகதி குருப்பட்டம் பெற்றபின் சம்பத்திரிசியார் கல்லூரியில் போசிரியாகவும் விடுதிக் கண்காணிப்பாளர் ஆகவும் நியமனம் பெற்ருர்.

உலகவாழ்வில் தமது எழுபத்தைந்தாவது வயதைப் பூர்த்திசெய்யும் பங்குனி 7-ந்திகதி வண. பிதா தோமாஸ் அவர்கள் கத்தோலிக்க திருச்சபைக் குருவாக நாற்பத்தொன்பது வருடங்களும், செபமாலைச் சபைத் தலைவராக முப்பத்துமூன்று வருடங்களும் இருந்திருக்கிருர்.

பாரதத்திலும், ஈழத்திலும் செபமாலைத்தாசர்சபையை உருவாக்கிய பெருமையும், புகழும் வண. தோமாஸ் சுவாமி அவர்களையே சாரும்.

— எஸ். தொம்மானுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### பண்டாரநாயக்கா கொலைவழக்கு

சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பட்டுவரும் பண்டாரநாயக்கா கொலைவழக்கிலே முடிக்குரியதரப்புச் சாட்சியங்கள் சென்ற திங்கட்கிழமையன்று முடிவடைந்துவிட்டன. முடிக்குரியதரப்பில் எல்லாமாக 79 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### இன்னுமே சம்பளம் கிடைக்கவில்லை

வடபகுதியிலே இதுவரை சுமார்பதினாயிரம்பேருக்குச் சம்பளம்கிடைக்கவில்லை. வடபகுதியிலுள்ள சுமார் ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு இன்னுமே சம்பளமும், பென்ஷன்காரரான சுமார் இரண்டாயிரம் பேருக்கு இன்னுமே பென்ஷனும் கிடைக்கவில்லையாம். மீதியான இரண்டாயிரம் பேரும் அரசாங்க ஊழியர்கள்.

### பெண்மணியான அப்புக்காத்து

செல்வி மனமோகினி வசந்தி பார் குமாரகுலசிங்கி ஒருசுப்பிறீங்கோட்டு அப்புக்காத்துவாகச் சென்ற 29-ந்திகதியன்று நீதியரசர் சன்ஸோனி, நீதியரசர் தம்பையா என்பவர்கள் முன்னிலையிலே சத்தியப்பிரமாணஞ் செய்திருக்கின்றார். இவர் கொழும்பிலே ஓர் அப்புக்காத்துவாகக் கடமையாற்றும் திரு. சி. எஸ் பார் குமாரகுலசிங்கியின் புதல்வி. ஒருபரிஸ்றராக அரங்கேறியுள்ளவர்.

### வித்தியாதிபதியின் சம்மதம்வேண்டும்

வித்தியாதிபதியின் அங்கீகாரமில்லாது அவரதுநிர்வாகத்தில் வந்துள்ள பாடசாலைகளில் எந்தஆசிரியர்களையும் நியமிக்கப்படாதென்று சகலகல்லூரிகளினதும் அதிபர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் ஒருசுற்றறிக்கைமூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பாடசாலைகளின் நிதியிலிருந்து அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்கும்வழக்கத்தை நிறுத்திவிடுமாறும் அதில்கேட்கப்பட்டிருக்கிறது.

### சீனித்தொழிற்சாலை

கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலை இவ்வருடத்தில் சீனிஉற்பத்திசெய்ய முடியாதிருக்கிறது. அதற்குக்காரணம், கமத்தொழிற்பகுதி அதற்குத்தேவைப்படும் கரும்பைஉதவமுடியாத நிலைமையில் இருப்பதே. ஆரம்பத்தில் கமத்தொழிற்பகுதி 80 000 தொன்கரும்பு கொடுக்க உடன்பட்டது. ஆனால், இப்போதோ 20,000 தொன் கரும்புமாத்திரம் கொடுக்கமுடியுமென அது தெரிவித்துள்ளது. இதனைக்கொண்டு சீனி உற்பத்திசெய்வதால் நயம்வரமாட்டாது. ஏனெனில், ஒருதொன்சீனி உற்பத்திசெய்ய 1,200 ரூபாவரை செலவேற்படும்.

### இனிமேல் தமிழில் இல்லை

இதுகாலவரை அரசாங்கபகுதிகளின் நிர்வாகஅறிக்கைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலமாகிய மூன்றுமொழிகளிலும் வெளியிடப்பட்டுவந்தன. ஆனால், இனிமேல் இந்தநிர்வாகஅறிக்கைகள் உத்தியோகமொழியான சிங்களத்தில்மாத்திரம் வெளியிடப்பட வேண்டுமென்றும், அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பும் அவற்றுடன் இருக்க வேண்டுமென்றும் அரசாங்கபகுதிகளின் தலைவர்களுக்குத் திறைசேரிக் காரியதரிசி அனுப்பியிருக்கும் நிருபம் ஒன்றில் அறிவித்திருக்கின்றார். நீதிமந்திரியிடுத்த உத்தரவின்பேரிலேயே இவர் இந்தநிருபத்தை அனுப்பியிருக்கின்றார்.

### பாடசாலைகளின் மோசமான நிலை

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் வந்துள்ள உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளின்நிலைமை மிகவும்மோசமான கட்டத்தில் இருக்கிறது. இந்த மோசமானநிலைமையைப் போக்குவதற்குக் கல்விப்பகுதி உடனடியாகப் பூர்வாங்கநடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுகேட்டு அக்கரைப்பற்று வட்டார தமிழ்ஆசிரியசங்க கூட்டத்தில் ஏகமனதாக ஓர்பிரேரணை நிறைவேறியிருக்கிறது.

### சம்பளக்கமிஷன் அறிக்கை

எமதுநாட்டின் எதிர்காலம் ஆபத்துநிறைந்ததாய் இருக்கிறது; சம்பளக்கமிஷன் செய்துள்ளசிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவது அரசாங்கத்திற்குச் சாத்தியமல்ல; ஆயினும் அவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவரத் தவறும்போது நாடெங்கும் பெரிய நெருக்கடி தோன்றுமென்று சம்பளக்கமிஷன் அறிக்கைபற்றிச் சமசமாஜ கட்சித்தலைவர் டக்றர் என். எம். பெறேரா அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்.

### உபதேர்தல்களின் முடிவுகள்

மாத்தளை, இரத்கமை, குருநாகல் எனும் மூன்றுதொகுதிகளிலும் நடைபெற்ற உபதேர்தல்களிலே மாத்தளைப் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரான திரு. பி. எச். அலுவிகாரையும், இரத்கமைப் பிரதிநிதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகரான திரு. டி. ஈ. திலகரத்தினவும், குருநாகல் பிரதிநிதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகரான திரு. ஜே. பத்திரானவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் இருகட்சிகளும் முன்னிருந்தவாறே தங்கள்பிரதிநிதிகளை இப்போதும் கொண்டிருக்கின்றன.

### வங்கிஊழியர் வேலைநிறுத்தம்

கொழும்புநகரிலும், வெளியூர்களிலுமுள்ள மூவாயிரம் வங்கிஊழியர்கள் சென்ற 3-ந்திகதி திங்கட்கிழமை நள்ளிரவுமுதல் வேலைநிறுத்தஞ்செய்திருக்கின்றார்கள். 1959-ம் ஆண்டுக்குப்பின் இவர்கள்நடத்தும் இரண்டாவதுவேலைநிறுத்தம் இதுவாகும். இதனால் பதினெருவங்கிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படியாக உதவித்தொழில்மந்திரி யோசனைகூறினார். கூடியவிரைவிலே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமெனவாக் குறுதியளித்தார். ஆனால், வங்கி யூனியன் அவருடைய யோசனையை நிராகரித்துவிட்டது.

### உணவுஉற்பத்தியைப் பெருக்கும்முயற்சி

இலங்கையிலே உணவுஉற்பத்தியைப் பெருக்கும்விஷயமாய் நடைபெற்றுவரும் புதியமுயற்சிகளுக்குப் பெரிதும் ஊக்கம்அளிக்கக் கூடிய சகலஉதவிகளும் செய்யுமாறு விவசாய மந்திரி சகல அரசாங்கஅதிபர்களுக்கும் ஒருசுற்றுநிருபமூலம் ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்றார். வெளிநாட்டுச் செலவாணியைச் சேமிப்பதற்காக இறக்குமதிப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளனவென்றும், ஆகவே உள்நாட்டில் உணவுப்பொருள் முதலியவைகளை அதிகம் உற்பத்திசெய்து, இலங்கைக்குவெளியே அதிகபணம் செல்வதைத் தடைசெய்யவேண்டுமென்றும் அவர் தனதுசுற்றறிக்கையில தெரிவித்திருக்கிறார்.

# செஞ்சீனாவில் பயங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி நிபந்தனைகளின்றிச் செஞ்சீனாவுக்கு உணவுதவியளித்தால், இப்பொழுது தாண்டவமாடும் உணவுப்பஞ்சத்துக்கு எந்த அரசாங்கம் பொறுப்பாளியோ அந்த அரசாங்கம் ஆட்சிப்பீடத்தில் வேரூன்றுவதற்கு உதவுவதாகவும் முடியும். எனினும் இறைவனுதவியால் விவவாசாயம்பெருகி, உணவுப் பொருட்களை மிகுதியாய்க் கொண்டிருக்கும் ஐக்கிய அமெரிக்காவும், கொம்மன்வெல்த் நாடுகளும் உலகெங்கணுமுள்ள ஏழைகளுக்கு கிறிஸ்துவ இரக்கத்துடன் உதவ முன்வரவேண்டியது மேற்குநாடுகளின் கண்டிப்பான கடமையென்க.

**நிபந்தனைகளின்றி:**

பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டியதுமன்றி, தருமம் அரசியல் நிபந்தனையற்றதாயிருக்கவும் வேண்டியது. அதாவது, சீனாவில் பசியால் வாடும் மக்களுக்கு உதவியளிக்கும் உபகாரத்தூதர்கள் செல்ல உத்தரவு பெறவேண்டும், சோவியற் ஆட்சியாளரிடமிருந்து முன்பெற்றது போல. 1922-இல் பாப்பரசரின் உபகாரத்தூதர் ரூஷியாவிற்குச் செல்வதற்கு அனுமதிகிடைத்தது. அவ்வாண்டு ஆடிமாதம் 14-ந்திகதி ஒன்பது குருமாரும் 3துணைச் சகோதரரும் உட்படப் பன்னிருவரைக்கொண்ட உபகாரத்தூதர்குழு றோமையிலிருந்து கிறிமியாவுக்குச் சென்று, புரட்டாசி 1922-ம்ஆண்டு தொடக்கம் 1924-ம்ஆண்டு புரட்டாசிவரை, கிறெம்லின் தடுக்கும்வரை, ஊழியம்புரிந்தது.

அந்த உதவித் தூதர்குழு 2,500 ரூஷியர்களுக்கு வேலைகொடுத்து, நாள்தோறும் (மொஸ்கோ, லெனின்கிறட் உட்பட, 400 இடங்களிலிருந்த 160,000 மக்களுக்கு உணவு அளித்தது. லெனின் தந்தஉத்தரவு போன்று, சர்வதேசத்தருமத் தாபனங்கள் சீனாவுக்கு உதவியளிக்கும்படி பெக்கிங் அரசாங்கம் உத்தரவுதரச்செய்ய முடியாதா? போர்மோசாவில் உள்ளசுதந்திர சீன அரசாங்கம் தற்போதைய உணவுப்பஞ்ச இருல்போட்டு அரசியல் சுருப்பிடிக்க எண்ணுதிருப்பது அதன் மேற்குணமேயென மெச்சவேண்டும். உண்மையான பரோபகார சிந்தையுடன், சீன மக்களுக்கு உதவிகோரி, ஐ. நா. தாபனத்தையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையும், வத்திக்கானையும் கேட்டிருக்கிறது. சீன அரசாங்கம் "துறையையும் வழியையும் திறந்துவிடும்படி" சுதந்திரநாடுகள் அதை விண்ணப்பிக்க வேண்டுமென ஜனாதிபதி சியாங்-கே-ஷெக் கேட்டிருக்கிறார்.

### ஆரம்பபகுதிப் பாடசாலைகள் திரும்பக் கையளிக்கப் படுகின்றன

கட்டணம் அறவிடாது தனித்தியங்கும் பாடசாலைகளாகவிரும்பி முன்வந்துள்ள பன்னிருபாடசாலைகளினதும் துணைப்பாடசாலைகளாக இருந்துவந்த ஆரம்பபகுதிப் பாடசாலைகளையெல்லாம் அடுத்துநிகழும் வைகாசிமாதம் 1-ந்திகதிதொடக்கம் அவற்றின் சொந்தக்காரரிடம் திரும்பக்கொடுபட வேண்டுமென்று சென்ற புதன்கிழமை நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்திலே முடிவுசெய்யப் பட்டிருக்கிறது. உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளையும், ஆசிரியபயிற்சிக் கல்லூரிகளையும் அரசாங்கம் எடுத்துநடத்தும் சட்டத்தின்கீழ் 1-ம், 2-ம்தரப் பாடசாலைகள் தனித்தியங்கவிரும்பினால் அனுமதியளிக்க விதிவிலக்குச் செய்யப்பட்டிருந்தது. அப்படியான பாடசாலைகளுடன் இயங்கிய ஆரம்பபகுதிப் பாடசாலைகளையும் அவற்றுடன்சேர்ந்து தனித்தியங்க அனுமதிப்பதென்று மந்திரிசபைக்கூட்டத்திலே இப்பொழுது முடிவுசெய்யப் பட்டிருக்கிறது. இப்பாடசாலைகளின் ஆசிரியர்களது சித்திரைமாதச்சம்பளம் கல்விப்பகுதியினாலே வழங்கப்படும்.

### வெளிநாட்டுப் பத்திரிகைகள்

பிரதமர் சிறிமாவையும், அவருடைய அரசாங்கத்தையும் தாக்கியோ அன்றேல் குறைசொல்லியோ எழுதப்பட்டுள்ள வெளிநாட்டுத் தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளைச் சுங்கப்பகுதி கடுமையாகத் தணிக்கைசெய்து அப்படியானவைகளை நாட்டினுள்விடாது தடுக்கத்தொடங்கியிருக்கிறது. இலங்கைப் பிரசைகளிடையே சண்டைசச்சரவுகளை உண்டுபண்ண அன்றேல் அவர்களைக் கலகஞ்செய்பத் தூண்டுவதாகக் கருதப்படும கட்டுரைகளையுமே நாட்டில்வரவிடாது தடுக்கும்அதிகாரம் சுங்கப்பகுதிஅதிபருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

### புத்தாண்டும் சத்தியாக்கிரகமும்

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆதரவளிக்குமுகமாக இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் யாவரும் தமிழ்ப்புத்தாண்டுத் தினத்தை ஒருதுக்கதினமாக அனுட்டிக்க வேண்டுமென்ற ஓர் இயக்கம் ஆரம்பமாகியிருக்கிறது. அன்றையதினம் ஆலயங்களில் பிரார்த்தனை நடத்துவதற்கும், அன்று புத்தாடைகள் தரித்து விழாக்கள்நடத்துவதைத் தவிர்ப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### திரும்பிச்செல்லும் கடிதங்கள்

காங்கேசன்துறையிலுள்ள பலருக்கு அரசாங்க பகுதிகளிலிருந்து சிங்கள மொழியிலே கடிதங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. சிலருக்குத் தனிச்சிங்களத்திலும், சிலருக்குச் சிங்களகடிதங்கள் ஆங்கில மொழிபெயர்ப்புடனும் போகின்றன. இதனை ஆட்சேபிக்குமுகமாக அவர்கள் இந்தக்கடிதங்களைத் திருப்பி அனுப்புகின்றார்கள். கடிதங்களின் வெளிஉறைகளிலும் விலாசங்கள் சிங்களத்தில்மட்டுமே வருவதால் தபால்ஊழியர்கள் பெருங்கஷ்டப்படுகின்றார்கள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அன்றுநான் சதாசகாயமாதாவின் அற்புதசகாயத்தால் பயங்கரசிவாபத்திலிருந்து தற்காக்கப்பட்டேன். அதன்மேல் ஆறுமாதகாலமாய் எனக்குண்டாயிருந்தநோய் திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியாரின் சலுகையாலும் குணமடைந்து வருவதையிட்டு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, நேர்த்திப்படி இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன்.

மாதாவின் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம். |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### சித்திரை மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | ஞா. | 1 | தவளோற்சவ ஞாயிறு (வி, ம.) | வெ. |
| 10 | தி. | ம | காலதினம் (ஞாயிறு பூசை) | வெ. |
| 11 | செ. | | அர்ச் 1-ம் சிங்கராயர் | வெ. |
| 12 | பு. | ம | காலதினம் (ஞாயிறு பூசை) | வெ. |
| 13 | வி. | | அர்ச். ஏர்மெனஜில்தப்பர் | சி. |
| 14 | வெ. | | அர்ச். யுஸ்தீனப்பர் (அர்ச். திபூர்சியார் தோழர் ஞா.) | சி. |
| 15 | சனி | ம | மரியாயின் சனி | வெ. |

சத்திய வேத

பாதுகாவலன்

1961-ம் ஆண்டு

சித்திரைமாதம் 8-ந் திகதி

## சலுகையன்று உரிமையே

1956–ம் ஆண்டுமுதல் இலங்கையிலே சிறுபான்மை இனத்தினரும்' சிறுபான்மை மதத்தினரும் தங்களுக்கு எத்தகையபாதுகாப்பும் இல்லாததுகண்டு மனமுடைந்திருக்கின்றனர். இந்தச் சிறுபான்மைவகுப்பினருக்கு அடிப்படை ஜனநாயக மனிதஉரிமைக்கும், மொழிஉரிமைக்குமான பாதுகாப்புகள் இன்றைய அரசியற்திட்டத்தில் இல்லை. அதனால் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்திலே சிறுபான்மைமக்களின் நல உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சட்டதிட்டங்களை மனம்போனபோக்கில் நிறைவேற்றிக்கொண்டே போகின்றது. அதன் விபரீதபோக்கைக் கட்டுப்படுத்தித் தங்கள்சீவாதார உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே தமிழ்ப்பேசும்மக்கள் சத்தியமேஇலட்சியமாகவும், சாத்வீகமே ஆயுதமாகவும்கொண்டு சாத்வீகப் போர் நடத்துகின்றார்கள், இந்நாட்டின் விடுதலைக்காக மற்றவர்களுடன் தோளோடுதோள்நின்று தமிழருமேபோராடினார்கள். அதனால் சுதந்திரத்தின்பேறுகளை அனுபவிக்கத் தமிழருக்கும் உரிமையுண்டு. இந்தஉரிமை மறுக்கப்பட்டபோதே தமிழ்மொழியையும், தமிழ்ப்பேசும் மக்களையும் காப்பாற்றுதற்கும், அவர்களின் எதிர்காலசுபீட்சத்துக்கு அடிகோலுவதற்குமே சத்தியாக்கிரகப்போராட்டம் நடைபெற்றுவருகின்றது.

பலநூற்றாண்டுகளாகத் தமிழ்ப்பேசும்மக்களும், சிங்களமக்களும் இந்நாட்டில் ஒற்றுமையாக ஒரே தாய்வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று சகோதரபட்சமாக வாழ்ந்துவந்திருக்கிறார்கள். அவ்வாறே இனிவரும்காலத்திலும் ஒற்றுமையாகவும், சகோதரபட்சமாகவும் வாழவேண்டும். சிங்களமக்களுக்கு அவர்களின்மொழியில் எவ்வளவு பற்றுதலுண்டோ அவ்வளவுபற்றுதல் தமிழ்மொழியிலும் தமிழ்ப்பேசும்மக்களுக்கும் உண்டு என்பதை அரசாங்கம் உணரவேண்டும். தமிழ்ப்பேசும்இனம் தனதுசொந்த நாட்டிலே சுதந்திரமற்ற ஓர்இனமாக—அடக்கிஒடுக்கப்படும் ஓர்இனமாக அடிமைவாழ்வு வாழ்வதைக் காட்டிலும் அழிந்துபோவதே மேலென்றுஉணரத்தொடங்கிவிட்டது. பூரணசமத்துவ அடிப்படையிலே தமிழ்ப்பேசும்மக்கள் சிங்களமக்களுடன் ஒற்றுமையாக வாழமுடியும். இந்நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்கு இருவினமக்களினதும் ஒற்றுமையும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் அத்தியாவசியம்வேண்டற்பாலன.

ஏதோ குடிமக்களுக்குப்போன்று தமிழர்களுக்குக் கொடுத்தே கொடுத்துச் சிங்களவரின்கை சலித்துவிட்டதாம். இத்தனைசலுகைகளுக்குப்பின்னும் திருப்தியடையாத தமிழ்மக்களைச் சும்மாவிடக்கூடாதாம். அவர்கள் எமதுசொல்லைக் கேட்காவிட்டால் கடைசிச்சிங்களவன் இந்நாட்டிலுள்ளவரை போராடியேதீருவானும். இவ்வாறு சந்தர்ப்பவாதிபோன்று கட்சிக்குக்கட்சிபாயும் சிங்களஅரசியல்வாதிஒருவர் ஏதோ ஆவேசங்கொண்டவர்போல் கூறுகிறார். கடைசித்தமிழன் இந்து சமுத்திரத்தில் குதிக்கிறவரை நான் நிம்மதியாய் வாழப்போவதில்லையென்று அப்போது கூறியஅந்தக் கனவான் இன்றுநிம்மதியாகக்கண்ணயர்ந்து இளைப்பாறுகின்றார், தமிழனே இன்னும்முன்போல உயிர் வாழ்ந்திருக்கின்றான். சிங்களமக்களுக்கு இந்தநாட்டில் எத்துணை அக்கறையும், உரிமையும் இருக்குமோ அத்துணை அக்கறையும், உரிமையும் தமிழ்ப்பேசும் மக்களுக்கும்உண்டென்பதை அவர்கள்உணரவேண்டும், தமிழ்ப்பேசும்மக்கள்கேட்பது சலுகையன்று, உரிமையே.

சத்தியாக்கிரகம் நீடிக்கிறவரை சமரசப்பேச்சே இல்லையென்று அரசாங்கமும், உரிமைகிடைக்கும்வரை சத்தியாக்கிரகத்தை நிறுத்தப்போவதேயில்லையென்றுதமிழ்ப்பேசும்இனமும் சலஞ்சாதித்துநிற்கின்றன. இந்நாட்டிலே கடைசித்தமிழன் இருக்கும்வரை தன்னையும், தனது இனத்தையும் 'அடிமையாக்கும் எந்தச்சட்டத்தையும் கடைசிவரை எதிர்த்துக்கொண்டேயிருப்பான் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். தமிழ்ப்பேசும்மக்களின் அரசியல்உரிமைகளைப்பறித்து இந்த நாட்டில் எந்தஅரசாங்கமும் நிம்மதியாக ஆட்சிசெய்யமுடியாது, இந்நாட்டில் வதியும்மக்களில் மூன்றிலொருபகுதியினரானமுப்பதுஇலட்சம் தமிழ்ப்பேசும்மக்களின் அதிருப்தியையும், மனக்கசப்பையும் அரசாங்கம் சம்பாதித்துக்கொண்டிருக்கும்வரை இந்நாட்டின் தேசிய பொருளாதாரம் ஒருபோதும் விருத்தியடையமுடியாது. அரசாங்கம் மொழிப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவை[illegible]தற்குப்பதில் படைப்பலத்தையும், தனதுபெரும்பான்மைப்பலத்தையும், பங்கீட்டரிசி வழங்காது தமிழ்மக்களைப் பட்டினி போடும்தந்திரோபாயத்தையும், கம்யூனிஸ்தர்களின் சூழ்ச்சியையும் கையாண்டு சத்தியாக்கிரகத்தை முறியடிக்கச்செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அடுத்தபடியாக அடக்குமுறையை அதுகையாளுவது பற்றிக் கடுமையாக ஆலோசிக்கின்ற இந்தவேளை மொழிப்பிரச்சினை தீர்வதற்கான[illegible] சூழ்நிலை காணப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

# ஆசிநீர் ஓர் ஞானப்பொக்கிஷம்

பெரியசனிக்கிழமைத் திருச்சடங்குகளின்பின் புதிதாக ஆசீர்வதிக்கப்பட்ட நீரோடு வீடுதிரும்பினோம். ஆசிநீரைப் பத்தியுடன் உபயோகிப்பதால் நாம் அடையக்கூடிய ஞானநன்மைகளைப்பற்றிச் சற்று ஆராய்ந்தறிதல் நன்றாகும்.

### ஆசிநீர் ஒருதேவதிரவிய அனுமானியம்

ஆசிநீர் ஒரு தேவதிரவிய அனுமானியம். அதற்கு ஆசீர்வாதம் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் நெருப்பினால், புயலினால், நோயினால் வரும் ஆபத்துவேளைகளில் அதை விசேஷமாய் உபயோகிக்கும்படி பரிசுத்த தாயாகிய திருச்சபை நம்மைத் தூண்டுகின்றது. எனவே, ஒவ்வொரு கத்தோலிக்க இல்லமும் போதியஅளவு ஆசிநீர்வைத்திருத்தல் அவசியம்.

### ஆசிநீரினால் அடையக்கூடிய நன்மைகள்

ஆசிநீரினால் நாம் பெறக்கூடிய நன்மைகளை நாம் நன்கு பயன்படுத்துவதில்லை. ஒரு துளி ஆசிநீரில் மதித்தற்கரிய ஞானத் திரவியம் அடங்கி இருக்கின்றது. இதைப்பற்றி நாம் போதிய அளவு சிந்திப்பதில்லை. ஆசிநீரினால் ஏற்படும் பல நன்மைகளை மரணத்திற்குப்பின் நாம் உணருவது போல, இப்பொழுதும் உணருவோமானால், அதை அதிக விசுவாசத்துடனும், வணக்கத்துடனும், அடிக்கடியும் உபயோகித்து வருவோம். திருச்சபையின் செபங்களின் நிமித்தமே ஆசிநீருக்கு மேலான சக்தியும், வல்லபமும் வருகின்றன. ஏனெனில் திருச்சபையின் செபங்களை அதன் ஸ்தாபகராகிய கிறிஸ்துநாதர் எப்போதும் உவந்து ஏற்றுக்கொள்கிறார்.

### திருச்சபையின் செபங்கள்

குருவானவர் ஆசிநீரைத் தயாரிக்கும்பொழுது சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கும் சில செபங்கள் வருமாறு: "ஆண்டவரே......இந்த உமது சிருட்டியாகிய நீருக்குப் பேய்களை ஓட்டவும், நோய்களை அகற்றவும் தெய்வீக வல்லபத்தை அளித்தருளும். இவ்வாறு விசுவாசிகளின் வீடுகளிலோ, பொருட்களின் மீதோ இந்நீர் தெளிக்கப்படுவதினால், அவைகள் அசுத்தத்தில்நின்று விடுதலைபெறவும், சிதைவில்நின்று காப்பாற்றப்படவும் செய்தருளும்........ இவ்விடத்தில் வசிப்போரின் சமாதானத்தையோ, பாதுகாப்பையோ கெடுக்கக்கூடிய யாவும் இந்தநீரின் தெளிப்பினால் நீங்கி, உமது திருநாமத்தைக் கூப்பிடுவதால் அவர்கள் அடைந்துகொள்ள விரும்பும் சௌக்கியம் சகல தாக்குதல்களில் நின்று காப்பாற்றப்படுவதாக."

### ஆசிநீர் தேவ ஆசீர்வாதத்தை இறங்கச்செய்கின்றது

ஆசிநீரின் ஒரு துளியையாவது எடுத்து உனக்கேனும், யாருக்கேனும் தெளிக்கும்பொழுது மேற்குறிப்பிட்ட செபங்கள் பரலோகத்தைநோக்கி எழுந்துசெல்கின்றன. குறிக்கப்பட்டவர் சமூகமாய் இருந்தாலென்ன, இல்லாமற் போனாலென்ன, சருவேசுரனுடைய ஆசீர்வாதங்கள் அவருடைய ஆத்துமத்தின்மேலும் சரீரத்தின் மேலும் இறங்குகின்றன.

### ஆசிநீர் பசாசை அகற்றுகின்றது

ஆசிநீருக்கு பசாசின்மேலும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சாத்தான் அதை வெறுக்கின்றான். ஆசிநீரால் அடிக்கடி தெளிக்கப்படும் இடத்திலோ, ஆளுக்கு அருகாமையிலோ பசாசு நீண்டகாலம் தங்கி இருக்கமுடியாது.

### ஆசிநீர் அன்பர்களுக்கும் உதவியளிக்கின்றது

விசுவாசத்துடனும் பயபக்தியுடனும் தெளிக்கப்படும் ஆசிநீர் யேசுவின் திரு இருதயத்தை இளகச்செய்து, நீர் நேசிப்பவர்கள்மீது தமது ஆசீர்வாதத்தைப் பொழியவும், அவர்களுடைய ஆத்துமத்தையும் சரீரத்தையும் சகல ஆபத்துக்களில்நின்று காப்பாற்ற[illegible] கவலையும் அச்சமும் உனது உள்ளத்தை நீடிக்கும் சமயத்தில் ஆசிநீர்த்தொட்டியண்டை விரைந்துசென்று, உமது அன்பர்களுக்குத் திருச்சபையின் செபங்களினால் வரும் நன்மைகளை அளிப்பீராக.

### ஆசிநீர் உத்தரிக்கும் ஆத்துமாக்களுக்கும் உதவுகின்றது

உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள் ஆசிநீரை எத்துணை தணியாத ஆசையுடன் விரும்புகிறார்கள் என்பதை உத்தரிப்புஸ்தலத்திலுள்ள ஒருவன் தான் சரியாக உணர்ந்துகொள்ள முடியும். நமக்காகப் பரிந்துபேசும் ஒரு குழுவினரை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டுமாயின், ஆசிநீர்த் தொட்டியண்டை உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களின் ஆசை ஆவல்களை மறவாதிருப்போமாக. மோட்சத்தை மிகவும் அண்மியிருக்கும் பரிசுத்த ஆத்துமங்கள் தங்கள் வேதனைகளிலிருந்து விடுதலை அடைவதற்கு அவர்களுக்கு ஒரு துளி ஆசிநீரே இப்போதே அவசியமாயிருக்கலாம்.

### ஆசிநீர் அற்பபாவங்களை மன்னிக்கின்றது

திருச்சபையின் தேவதிரவிய அனுமானியங்களில் ஆசிநீரும் ஒன்றாக இருக்கிறபடியால், அது அற்ப பாவங்களைப் போக்குகின்றது. ஆசிநீரைத் தொட்டுப் பத்தியுடன் சிலுவை அடையாளத்தை வரையும்பொழுது "ஆண்டவரே இந்தப் பரிசுத்த நீரினாலும் உம்முடைய விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தினாலும் என்னுடைய பாவங்களை எல்லாம் கழுவியருளும்" என்ற செபத்தைச் சொல்லி எமது ஆத்துமங்களைத் தேவசமுகத்தில் அழகாகவும், தூய்மையாகவும் வைத்துப் பாதுகாத்துக்கொள்வோமாக.

### ஆசிநீர் பாவங்களின் அநித்திய ஆக்கினையைக் குறைக்கின்றது

ஒருவன் "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துவுடையவும், நாமத்தினாலே ஆமென்யேசு" என்ற செபத்தைச் சிலுவை அடையாளம் வரைந்து சொன்னால் மூன்று வருடப்பலனை அடைந்துகொள்ளலாம். ஆனால், அதே செபத்தை ஆசிநீரோடு சிலுவை அடையாளம் வரைந்து சொன்னால் 7 வருடப்பலனை அடைந்துகொள்ளலாம். இத்துணை நன்மைகளை அளிக்கும் கருவியாகிய ஆசிநீரை அடிக்கடி உபயோகித்து நாம் நன்மையடைவதுடன், பிறருக்கும் நன்மைவருவிக்கப் பிரயாசப்படுவோமாக.

### கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியைகளுக்கு ஒரு விடுதி ஞானஒடுக்கம் பாசையூர் சென் இறப்பாயேல் கன்னியர் மடத்தில் 26–4–61 புதன் மாலை 6 மணிக்குத் தொடங்கி 30–4–61 ஞாயிறு காலை 7 மணிக்குத் திவ்விய பூசைப்பலியுடன் முடிவுபெறும்.

இந்த ஞானஒடுக்கத்தில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியைகள் மேற்படி மடத்துச் சங். தாயார் அவர்களுக்குச் சித்திரைமாதம் 20 ஆம் திகதிக்குமுன்னர் அறிவித்து இடஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மி. மரிய மார்செலா,
காரியதரிசி.

யாழ்ப்பாண மேற்றிராசனக்
கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோனின் உத்தானத்தைக் குறிக்கும் அடையாளங்கள்

— கே. எஸ். ஜோர்ஜ் பெரேரா —

யேசுநாதர் போஞ்சியு பிலாத்துவின் கீழ்பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து மூன்றாம்நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்ததிருநாள் திருச்சபையில் பாஸ்குத்திருநாளெனக் கொண்டாடப்பெறுகிறது. இப்பாஸ்கா நாட்களில் திருச்சபை 'அல்லேலுயா' எனும் பேரின்பக்கீதத்தைப் பாடுகிறது. பலிபீடங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்நாட்களில் பூசைப்பலிக்குக் குருவானவர் அணியும் வெள்ளைவஸ்திரங்கள் திருச்சபை அனுபவிக்கும் அளவில்லா ஆனந்தத்தை எடுத்துரைக்கின்றன.

கத்தோலிக்க உலகுக்கு உயிரோனின் உத்தானத்தை நினைவுகூரும் பாஸ்காவைபவத்திலும் மகத்தான வைபவமில்லை. அவரது உத்தானம் அவரது உலகவாழ்வின் உன்னதசெயலாக அமைகிறது. இவ்வுத்தானம் உலகம், சரீரம், பசாசு எனும் மூன்றுசத்துராதிகளுக்கெதிராக யேசுபிரான் பெற்ற வெற்றியின் சின்னமாகத் துலங்குகிறது. அது கத்தோலிக்க விசுவாசத்தின் அடிப்படையாக விளங்குகிறது.

யேசுபிரானின் உத்தானத்தைக் குறிக்கும் பல அடையாளங்களைப் பல்வேறு நாடுகளில் கத்தோலிக்கமக்கள் கையாண்டுவருகின்றனர். பலநூற்றாண்டுகளாக இவ்வடையாளமொழி திருச்சபையில் செழிப்போடும், வளத்தோடும் வளர்ந்துகொண்டே வருகிறது. இவ்வடையாளங்கள் பாஸ்குப்பண்டிகையின் அடிப்படையான கொள்கைகளை ஐம்புலன்களுக் கெட்டியமுறையில் எடுத்துரைக்கின்றன.

பெரியசனிக்கிழமையன்று தேவாலயங்களில் விளக்கேற்றப்படும் பாஸ்கா மெழுகுதிரி, உத்தானமாகிய கிறிஸ்துவைக் குறிக்குமோர் அடையாளம். அதை விளக்கேற்றியபின், அதன் நெருப்பைக்கொண்டு மற்றனைவரும் தங்களது மெழுகுதிரிகளையும் விளக்கேற்றுவர். இதன்கருத்து என்ன? நெருப்பு இருளை ஒழித்து வெளிச்சத்தை அளிக்கிறது குளிரைப் போக்குகிறது. பாஸ்காமெழுகுதிரி, உத்தானமாகிய உயிரோன் உலகொளியென்று காட்டுகிறது. அவர் பாவஇருளை நீக்கி, ஞானஅருளாம் ஒளியை அளித்தார். பாவத்தால் குளிர்நடுக்கமுற்ற நமது ஆத்துமங்களை, அருள்மாரிபொழிந்து புத்துயிரோடும், ஊக்கத்தோடும் செழிப்படையச்செய்தார். அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்தில் உலகொளியைக்குறித்துப் பின்வருமாறு வரைந்தார். "ஆதியிலே வார்த்தையானவரிருந்தார்...... அவருக்குள் சீவனிருந்தது. அந்தச்சீவன் மனிதருக்குஒளியாக அமைந்தது. அந்தஒளி இருளில் பிரகாசிக்கின்றது...... வார்த்தையாகிய அவர் இவ்வுலகத்திலே வருகிற அனைவரையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாயிருந்தார்."

கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தின் அங்கத்தவராம் நாமும் அஞ்ஞானமக்களை மெய்ஞ்ஞான மார்க்கத்தில் வழிநடத்தும் ஒளிகளாக அமைய வேண்டும். பாஸ்காமெழுகுதிரியின் மெழுகுஅழிய, தீபம்வளர்கிறது. அத்தீபம் ஒளியையும், பிரகாசத்தையும் அளிக்கிறது. அதைப்போலச் செபதபத்தைத் துணைக்கொண்ட நமது கிறிஸ்தவ வாழ்வு அஞ்ஞான இருளில் திலங்கும் மெய்ஞ்ஞான தீபங்களாக அமைதல் வேண்டும். அருள்மாரிபொழிய, புத்துயிர்பெற்ற ஆத்துமங்களைக் கொண்ட நாம் ஒளியின் புத்திரராக உலகமக்களுக்குக் காட்சியளித்தல் அவசியம்.

கிறிஸ்துநாதரின் உத்தானம், உலகமுடிவில் நாம் அடையவிருக்கும் மாமிச உத்தானத்தின் குறியாக அமைகிறது. 'ஈஸ்ரர்' முட்டைவழக்கம் இவ்வுண்மையோடு ஒற்றுமைப்பட்டிருக்கிறது. வெற்றிமுரசு முழங்க மரணத்தைத் தோற்கடித்தநாதன் வெற்றிக்கொடியைத் தாங்கியகரத்தோடு காட்சியளித்தார். இவ்வுத்தானம் அவரது திருச்சடலம் கல்லறையில் கிடத்தப்பட்டபின் நடந்தேறியசம்பவம். முட்டைக்குள் வளர்ந்தகுஞ்சு, சிலகால அளவில் முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவருவதுபோல, மரணத்தின் மேலும், கல்லறைஅடக்கத்தின்மேலும் வெற்றியுற்றநாதன் காட்சியளித்தார்.

'ஈஸ்ரர்' முட்டைவழக்கம் அமெரிக்காவிலும், மற்றும்நாடுகளிலும் மிகச் சிறப்போடும், கருத்துஒளிக்கும் முறையிலும் நடந்தேறிவருகிறது. முழுதும் அவிக்கப்பட்ட முட்டைகள் பலவர்ணங்களால் அலங்கரிக்கப்படும். இவை தோட்டத்தில் நாலாபக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கும். கோயில்மணியோசை 'அல்லேலுயா' அறிக்கையிட, சிறுபிள்ளைகள்சென்று தோட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் முட்டைகளைச் சேர்த்து வீட்டுஎஜமானிடம் கொண்டு வருவர். மேற்கூறியவாறு கிறிஸ்துவின் உத்தானம் நமது மாமிசஉத்தானத்தின் அடையாளமாகிறது. உயிரோனின் உத்தானத்தை அடையாளமொழியில் எடுத்துரைக்கும் 'ஈஸ்ரர்' முட்டைவழக்கம் நமது உத்தானத்தைப்பற்றிய சம்பவங்களைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. உலகமுடிவில் கடவுள் தமதுதூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார். அவர்கள் வானத்தின் மேல்முனைமுதல் கடைமுனைவரையில் நான்குதிசைகளிலுமிருந்து கடவுளால் சேர்த்துக்கொள்ளப்பட்டோரைக் கூட்டிச்சேர்ப்பார்கள். இவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் நீதியாற்றவரும் கடவுளது சந்நிதிமுன் காட்சியளிப்பர்.

நாதரின் உத்தானத்தினது இன்னுமோர் அடையாளமாக அமைகிறது வண்ணாத்திப்பூச்சி. பறக்கக்கூடிய ஆற்றலடையும்வரை அதுஓர்கூண்டுக்குள்ளேயிருந்து (Cocoon) வளரும். காலம் வந்ததும், அது கூண்டிலிருந்து வெளியேறி, பலவர்ணச் சிறகடித்துப் பறக்கும். மக்களுக்கு மனச்சந்தோஷத்தையும், மனத்திருப்தியையும் அளிக்கும். வண்ணாத்தியைப்போல, மரணத்தின்மேல் மகிமையோடும், மாட்சியோடும் வெற்றியடைந்தநாதன், கல்லறையைக் காவல்புரிந்தோரைக் கவலைக்கும் நடுநடுக்கத்துக்கு முள்ளாக்கி, பரிவட்டச்சீலைகளையும், தலையின்மேல்போர்த்திருந்த உருமாலையையும் கல்லறையில் வைத்துவிட்டு உத்தானமானார். இவ்வுத்தானம் பாவப்பாசத்தால் பாதிக்கப்பெற்ற மண்ணுலகோரின் மறுபிறப்பாகும் ஞானப்பிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. இவ்வாறு சுதந்திரமடைந்தமக்கள், உத்தானத்தின்காரணமாக மனச்சந்தோஷத்தையும், மனத்திருப்தியையும் அடைந்து "அல்லேலுயா" பாடுகின்றனர்.

உத்தானத்தின் இன்னுமொரு அடையாளந்தேடின் நமது மனக்கண்முன் காட்சியளிப்பது காடுதோறும், புல்வெளிதோறும் துள்ளியாடியோடும் முயல். முயலானது குட்டிஈனுவது பூமிக்குள் தோண்டப்பட்டிருக்கும் குழியிலே. அந்தக்குழியில் குட்டி வளரும். பூமியிலிருந்து வெளியாகிக் கவலையின்றித் துள்ளிவிளையாடி அனைவரையும் மகிழ்விக்கும். கல்லறையினின்று உத்தானமான உயிரோனால் சந்தோஷமடையும் நாம், எத்தகைய இன்னல்களை அனுபவிக்க நேரிட்டபோதிலும் அவையனைத்தையும் கிறிஸ்தவ நம்பிக்கை[illegible]யினால் மலர்ந்தவதனத்தோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும். முயலின் கவலையின்மைத்தனத்தினின்று நாமிந்தப்பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். உயிரோனின் உத்தானம் நமது கிறிஸ்தவ நம்பிக்கையினதும், ஆனந்தத்தினதும் அடிப்படைச்சத்தியமாக அமையவேண்டும்.

இவ்வடையாளங்கள் எடுத்துக்காட்டும் கொள்கைகளை நாம் நன்கறிந்து, அவைகளால்பயனுற்று, நமதுநாளாந்த வாழ்க்கையில் உயிரோனின் உத்தானத்துக்குரிய இடத்தையளித்து, இம்மையினிறுதியில் கத்தோலிக்க திருச்சபை கற்பிக்கும்வண்ணம் நமதுமாமிச உத்தானத்தை எதிர்பார்ப்போமாக.

# வீரநெஞ்சம் படைத்த வெண்கொற்றக் கொடியோன்

**அறிவின் நிறைகுடம்; அன்பின் பிரதிநிதி; அறத்தின் தந்தை; அருளின் வாய்க்கால்; வீரத்தின் விளைநிலம்; குவலயத்தில் சமாதானம் குறையாது பெருகத் தொண்டுபுரிந்த குணக்குன்று; இருளில் ஞானஒளிவீசிய கலங்கரை விளக்கு; இராயப்பரின் வழித்தோன்றல். இத்தனைப் புகழுக்கும் பாத்திரமான அந்த உத்தமன் யார்? அவர்தான் அர்ச். முதலாம் சிங்கராயர் பாப்பரசர்.**

அத்திலா' எனும் பெயர்பூண்ட கூனரின் அரசன், இத்தாலிமீது படை எடுத்துவந்தான். பலபட்டினங்களைக் கொள்ளையடித்தான்; தீக்கிரையாக்கினான். உரோமாபுரிமீது அவனது கோபக்கண் திரும்பியது. பரிசுத்த தந்தை சிங்கராயருக்குத் தகவல் கிட்டியது.

பொருதுப்படையும் போருமின்றி அன்பினாசாட்சி நடத்தும் தந்தை மனம் கலங்கவில்லை. மலைபோல் அசையாது நின்றார். பாப்பரசரின் திருவஸ்திரங்களைத் தரித்துச் செங்கோல் கரத்தேந்தி, படைஎடுத்த வேந்தனை எதிர்கொண்டு சென்றார். "உரோமாபுரியின்மீது படையெடுக்கும் உத்தேசத்தை மாற்றி, உடனே பின்வாங்கிவிடு" என்று உத்தண்டத்தோடு மொழிந்தார். அலைபோற் குமுறிவந்த பகையரசன் அமைதியாய் நின்றான். எதிர்வார்த்தை பேச அவனால் முடியவில்லை. இடிகேட்ட நாகம்போல நடுநடுங்கினான். பின்வாங்கித் திரும்பினான். எல்லோரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்.

"பாப்பரசரின் வார்த்தைக்கு ஏன் இந்தப்பணிவுகாட்டினீர்கள்?" என்று அரசனைத் துரைமக்கள் வினவினர். "அவர் எனக்குக் கட்டளையிடும்போது அவரின் அருகே காட்சிதந்த கனவான்கள் இருவர் வாளுருவியபடி பாப்பரசர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படி; இல்லையேல் உன்னைக் கொன்றுபோடுவோம் என்று பயமுறுத்தினார்கள்" எனப் பதிலுரைத்தான்.

இந்த அற்புதச் செய்தியானது உரோமாபுரி எங்கும் பரவியது. பாப்பரசர் சிங்கராயரின் 'பரிசுத்ததனம்' மலைவிளக்காய் மிளிர்ந்தது.

"ஜென்செரிக்" என்னும் வண்டாலிய மன்னன் உரோமாபுரிமீது படையெடுத்தபோதும் பாப்பரசர் தமது அருள்வலியால் அவனை எதிர்த்து வெற்றிகொண்ட நிகழ்ச்சியும் அவர் மகிமைக்கு மாண்புமிகும் சான்றாய் விளங்குகின்றது. ஒருமுறை, கொன்ஸ்தாந்தி நோப்பொலி பட்டணத்தில் கிளர்ந்தெழுந்த எவுத்திக்கெஸ் என்னும் பதிதரை எதிர்த்து அர்ச். பிளவியான் என்னும் அதிமேற்றிராணியாருக்கு "யேசுநாதரின் தெய்வீகமானுஷ ஐக்கிய இரகசியத்தை"க் குறித்து நிருபமொன்று எழுதினார்.

கல்விக்கடலான பாப்பரசர், அந்நிருபத்தை அனுப்புவதற்கு முன்பு அர்ச். இராயப்பரின் கல்லறைமீது அதனை வைத்து அதிலுள்ள பிழைகளைத் திருத்தியருளுமாறு நாற்பது நாட்கள் ஒருசந்தி காத்து மன்றாடிவந்தார். மன்றாட்டுப் பலித்தது. அர்ச். இராயப்பர் காட்சி தந்தார். "நிருபம் வாசித்துத் திருத்தினேம்" என்று திருவுளம்பற்றி மறைந்தார். 451-ம் ஆண்டு கல்செடன் பட்டணத்தில் சங்கம் கூடியிருந்த பன்னூற்றுக்கணக்கான மேற்றிராணிமார்கள் அதைப் படித்துப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

பாந்தகல்விஞானம் படைத்தவராய் விளங்கினாலும் பரிசுத்ததந்தை பழமரம்போலத் தாழ்ந்து, தாழ்ச்சியின் குன்றமாய் விளங்கினார்; சரமாரியாக இன்னல்கள் வந்து சூழ்ந்தபோதிலும், சஞ்சலமின்றித் திடமாகப்போராடினார். ஆயனின் கடமை தவறாது ஆடுகளை மேய்த்தார். நச்சுக்கொள்கைகளின் உண்மை விலாசத்தை விளக்கி, எதிரிகளை நடுநடுங்கச்செய்தார். பதிதபோதனைகளை உடைத்தெறியும் சம்மட்டியாய் விளங்கினார். உரோமாபுரியில் வானளாவி நிற்கும் பல ஆலயங்களைக் கட்டி எழுப்பிக் கிறிஸ்துவின் அரசுவளர்ச்சியடைய ஓயாது உழைத்தார் திருச்சபை உத்தியானவனத்திலே என்றும் வாடாமலர்களான ஞானநூல்களும், நிருபங்களும் நறுமணம் கமழச் செய்தார். புண்ணியங்களின் ஊற்றாய், புனிதத்தின் பொற்சுடராய், சமாதானவேந்தனின் சமாதானதூதுவனாய், நரகத்தின் வாசல்களை வெற்றிகொள்ளவிடாத ஞானப்போர்வீரனாய்க் கடமையாற்றினார்.

இருபதுவருடங்களும் பத்துத்திங்களும் இருபத்தெட்டுத்தினங்களும் திருச்சபையின் தலைவராய், எங்கள் ஞானமேய்ப்பராய் அரும்பணிபுரிந்தார். கர்த்தர் பிறந்த 461-ம் ஆண்டு பேரின்ப வீட்டைச் சென்றடைந்தார்.

பரிசுத்ததந்தை அர்ச். சிங்கராயர், எமக்குத் தாழ்ச்சியின் பாடப்புத்தகம்; வீரத்தின் வழிகாட்டி; அயராத உழைப்பின் தொழிலாளி; நீதியை விளக்கும் நிறைதுலாக்கோல்; அவரது உண்மைப்போதகத்தைக் கேட்டு அக்கிரமத்தின் பிறப்பிடமான அரசன் அடிபணிந்ததுபோல நாமும் அதிகாரிகளின் நற்போதனைகளுக்குச் செவிசாய்த்துப் பணிந்துநடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

இப்புண்ணியசீலரின் பொன்னாளை இம்மதி 11-ஆம் நாள் திருச்சபை விமரிசையாகக் கொண்டாடுகின்றது.

M. V.


## மரண-அறிக்கை விளம்பர விகிதம்

எமது பத்திரிகையில்மரணஅறிக்கை விளம்பரம் பிரசுரிக்க விரும்புவோர் பின்வரும் விகிதப்படி கட்டணம் செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு முழு(Fool's cap)பக்கக் கையெழுத்துப் பிரதிக்கு ரூபா 6-00.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்.


"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

—காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

'ஈஸ்ரர்' விடுமுறை ஆரம்பித்துவிட்டது. ஏறக்குறைய ஒருமாதகாலம் விடுமுறையாயிருக்கும். இந்த விடுமுறை காலத்தில் என்ன செய்யப்போகிறீர்கள்? நல்ல வெய்யிற் காலம். காலை பத்து மணிக்குப்பின் வெளியே புறப்படவே முடியாது. மாலை ஐந்துமணிவரை நிழலில்தான் இருக்கவேண்டும். இன்றேல் உங்களில் பலருக்கு நோய் வந்துவிடும். வெய்யில் சரிந்தபின் நன்ருக விளையாடுங்கள். மற்றும் நேரத்தில் காலையிலும், மாலையிலும் பாடங்களைப் படியுங்கள். ஒவ்வொருநாளும் பூசையில் பங்குபற்றக் கூடுமாஞல் அது மிகவும் நல்லது. வீட்டிலே பெற்ருேருக்கு உதவி செய்யுங்கள். வீணுக வீதிகளில் திரியாதேயுங்கள். பாலர்பக்கத்துக்கு நிறைய எழுதுங்கள். வீட்டிலே மாலைநேரத்தில் தினமும் குடும்பசெபமாலை சொல்லிவாருங்கள். உங்கள் சிறிய தம்பி தங்கையருக்குப் பாடம் சொல்லிக்கொடுங்கள். அத்துடன் இலங்கையில் ஒற்றுமையும், சமாதானமும் ஏற்படும்படி நன்ருக மன்ருடிவாருங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணு

## கர்த்தர் உயிர்த்தார்

மரித்த மூன்ரும் நாளினிலே
திருச்சுத ஞரெம் யேசுபிரான்
உயிர்த்தே எழுந்து மரணத்தைச்
செயித்தார் தெய்வப் பலமதனல்.

இடியும் இந்த ஆலயத்தை
மூன்று நாளில் அதைக்கட்ட
முடியும் என்று யூதருக்கு
எடுத் துரைத்த திருவாக்கு

மெய்யென் றின்றே ஒப்பித்தார்
மேதினி மீது உயிர்த்திட்டார்
வெய்யோன் ஒளிரு முன்னுலே
வெற்றிக் கொடியோ
டெழுந்திட்டார்.

மடிந்த பின்னும் மாந்தரெலாம்
முடிவு நாளில் மெய்யாக
உடலத் துடனே உயிர்ப்பரென
உறுதி தந்தார் யேசுபிரான்.

கர்த்தர் உயிர்த்த சத்தியமே
காசினி மீது இணையற்ற
அற்புத மாக நின்றிலங்கிச்
சத்திய மறையை மெய்ப்பிக்கும்.

வல்ல பரனுர் பொற்பாதம்
செல்வோம் பாலர் நாம்கூடி
அல்லே லூயா கீதத்தை
அகமகிழ் வோடு இசைத்திடுவோம்.

— 'துறவி'

## சிறுவர் அறிவுச் சக்கரம்—2

(1) இந்தச் சின்னங்களால் குறிப்பிடப்படும் அர்ச்சியசிட்டர்கள் யார்?
1. நங்கூரம்
2. செம்மறி ஆட்டுக்குட்டி
3. கோவில்
4. கண்
5. சிங்கம்
6. இரும்புக்கட்டில்
7. ரோசாப்பூக்களும் சிலுவையும்
8. போர்வையும், வாளும்

(2) கீழ்வரும் விஞக்களுக்கு விடை தருக.
1. யேசுநாதர் தாம் பாடுபடுவதற்குமுன் செய்த பெரிய புதுமை என்ன?
2. கல்வாரிமலைக்கு மற்ருெரு பெயரென்ன?
3. யேசுநாதர் பூங்காவனத்தில் பிடிபட்டபோது இராயப்பரினுல் காது அறுக்கப்பட்டவரின் பெயர் என்ன?
4. யேசுநாதர் சிலுவையிலிருந்து வசனித்த முதல் வாக்கியம் யாது?
5 யேசுநாதர் உயிர்த்தெழுந்தபின் யாருக்கு முதல்முதல் காட்சியளித்தார்?
6. உயிர்த்தெழுந்த யேசுநாதரை எமாவுசில் கண்ட சீடர்களில் ஒருவருடைய பெயரைக் கூறுக.
7. யேசுநாதருடைய திருவிலாவில் விரல்விட்டுச் சோதித்த அப்போஸ்தலர் யார்?

குறிப்பு: இப்போட்டியில் 14 வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் கலந்துகொள்ளலாம். போட்டி முடிவு திகதி 18-4-61. இத்திகதிக்குப் பின் வரும் விடைகள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விடைகள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர்,
"சிறுவர் அறிவுச் சக்கரம்"
அர்ச். சூசையப்பர்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## பிறர் சிநேகம்

தனக்கெனவாழாது பிறர்க்கெனவாழும் பொதுநோக்குடைய மக்களே மானிட குலத்தினர். சுயநலம் தழைத்துத் தன்னலம் ஒன்றினையே ஏகநோக்கமாய்க் கருதித் தாகத்துடன் உழைத்து, மாடிவீடு கட்டி அதில் பஞ்சுமெத்தையிலே பதினெட்டுத் தலையணைகளின் அரவணைப்பிலே துயரின்றித் தூங்கினுல் போதும் என்றும், என் அயலான் உண்ண உணவின்றி, அரவணைக்க யாருமின்றி, உடுக்கஉடையுமின்றி, இருக்கஇல்லமின்றி அலைந்து திரிவதைப் பார்த்தும் ஒருதுளி இரக்கமேனும் இல்லாது வாழ்பவன் 'கிறீஸ்தவனு'? இல்லை! இல்லை!! அவனல்ல கிறீஸ்தவன். அப்படியானுல் கிறீஸ்தவன் யார்?

ஓர் உத்தம குடும்பத்திலே, உயரிய குலத்திலே சீரும் சிறப்புடனும், பேரும் புகழுடனும் நாட்டில் நலம் பெற வாழ்ந்துவருகின்ருன் எற்மன். பாலர் பயிலும் பாடசாலையில் படித்துவரும்பொழுது அறிவுக் களஞ்சியமான தன் அரிய தந்தையாரை இழந்தான். அன்னையாரின் முயற்சியாலும், அரிய தந்தையார் விட்டுவைத்த செல்வத்தாலும் கவலையின்றி வாழ்ந்துவந்தான். பின்னர் இளைஞர்பயிலும் கலாசாலையில் கற்றுவரும் காலம் அவனையண்டிப் பல நண்பர்கள் கூடினர். ஏழை எளியவனென்ருே, பணக்காரன் பிள்ளையென்ருே எவ்வித வேறுபாடும் இன்றி 'எல்லோரும் என் நண்பர்கள்' என்ற மனப்பான்மையுடன் உறவாடிவந்தான். நாட்கள் உருண்டோடி மாதங்களாகின. மாதங்கள் ஒருங்குகூடி ஒருவருடமாயிற்று. வருடமுடிவுப் பரீட்சையும் நெருங்கிவிட்டது. அனைவரும் தமது பரீட்சைப் பாடங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தனர்.

அன்ருெருநாள் மாணவர்கள் பாடசாலையை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர். பாதிவழியிலே எற்மனுடைய நண்பனுன சேகர் மோட்டார் விபத்தில் சிக்கி அவல நிலையில் இருந்தான். இதைக் கண்ணுற்ற எற்மன் உடனே அவனை ஓர் மோட்டார் வண்டியிலேற்றி அன்புள்ளத்துடன் அருகே இருந்த அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ருன்.

ஆஸ்பத்திரியை அடைந்ததும் ஒரே திகிலும் களைப்பும் அடைந்தான் எற்மன். அவனுடைய திகிலடைந்த முகத்தைக் கண்ணுற்ற மக்கள் "தம்பிஎற்மன்! உமதுகளைப்பின் காரணம் யாது?" என விழிப்புக் குறியுடன் வினவினின்றனர். எற்மனுடைய நிலைபரமே அவர்களுடைய விஞவுக்கு விடையிறுத்தது. டக்றர் வந்து சேகருடைய காயங்களைப் பரிசோதனையிட்டார். சத்திரசிகிச்சையினுல் சேகருடைய காயங்கள் சுத்தமாக்கப்பட்டன. அந்நேரம் வலிபொறுக்க முடியாமல் "நண்பா!...எற்மன்!" என்று கூறிக்கொண்டு எற்மனுடைய மடியில் சாய்ந்தான் சேகர். நோவால் துடித்துக்கொண்டிருக்கும் சேகருடைய உடலைத் தன்மடியில்தாங்கிய இளம் இதயம் படைத்த எற்மன் என்ன செய்வான்? மெதுவாகச் சேகருடைய உடலைக் கட்டிலில் வளர்த்திவிட்டு வீடுநோக்கி விரைந்தான்.

மின்னல் வேகத்தில் வீட்டை அடைந்தான் எற்மன். தன்தாயிடம் அமைதியாகத் துயிலக்கூடிய படுக்கை ஆயத்தப்படுத்தும்படி அன்பாய்க் கூறிவிட்டுத் தன்நண்பனிடம் விரைந்தோடி வந்தான். அவனை அணுகி ஒரு மோட்டர் இரதத்தில் அவனை ஏற்றித் தன் வீட்டிற்கு அழைத்துவந்து, தன்தாயார் ஆயத்தம் செய்திருந்த படுக்கையில் நிம்மதியாய்த் தூங்கும்படி செய்தான். பின் அவனுக்கு நேரந்தவருது உண்ண உணவுமளித்து உறங்கும்படி பணித்தான். சேகர் நிம்மதியடைந்தான்.

வலதுகை செய்யும் உதவியை இடதுகை அறியாதிருக்கட்டும் என்ற யேசுவின் பொன்மொழிக்கிணங்கத் தான் செய்த இவ்வுதவியை எவருக்கும் வெளியிடவில்லை. அன்று மாலையில் தன் நண்பனை அவன் வீட்டிற்கு அனுப்பிவைத்தான். என்றும் அடையாத மன நிம்மதியும், உள்ளப்பூரிப்பும் அடைந்தான் எற்மன். பிறர் சிநேகத்தின் மலர்ச்சி இதுவன்ருே!

ஜோர்ஜ் பிள்ளைநாயகம்,
கரம்பன்.

## இந்திய கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| என் விசுவாசம் ... | 4-00 |
| அதிசய அன்னை அமலமரி ... | -50 |
| இதுதான் கருத்தடை ... | -75 |
| பாடுகளின் பாதையிலே ... | -80 |
| நம் சேசு ... | -60 |
| நடுத்தீர்வை உலா ... | -25 |
| ஊழியர்களின் மாதா ... | 1-50 |
| வாழவிடுங்கள் ... | -40 |
| தி. மு. க வழிகாட்டிகள் ... | -35 |
| திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கமும் ... | -55 |
| சுயபரித்தியாகம் ... | 1-00 |
| ஞான உணர்த்துதல் ... | -60 |
| மறு கிறீஸ்து ... | -45 |
| புதுமை வள்ளல் புனித அந்தோனியார் ... | -60 |
| தவறி விழுவோர்க்கு ஊன்றுகோல் ... | -25 |
| அர்ச் அந்தோனியார் மலர் ... | -35 |
| வாழ்விக்கும் வள்ளல் ... | 2-50 |
| செந்துகில் ... | 1-65 |
| சொற்கடந்த சுந்தரி ... | 2-00 |
| **நாடகங்கள்:** | |
| டோமினிக் சாவியோ ... | -65 |
| சமுதாயத் துரோகி ... | -50 |
| சமாதானம் சௌபாக்கியம் ... | 1-25 |
| உடைபடா முத்திரை ... | -15 |
| மதலேனுளின் ஏக்கம் ... | -50 |
| பலித்த கனவு ... | 1-25 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

செப அப். சபை வெளியீடு

## சித்திரை மாதம்

பொதுக்கருத்து:—குருமார் குறைவினுல் மேற்றிராணிமார் அனுபவிக்கும் அங்கலாய்ப்பைக் கத்தோலிக்க சேவாசங்கமும், இன்னும் இது போன்ற பிற இயக்கங்களும் இயன்றளவு தீர்க்கும்படியாக வேண்டிக் கொள்வது.

வேதபோதக கருத்து:—கத்தோலிக்கர் மத்தியில் அயல்நாட்டு வேதபோதக தளங்களுக்குத் தேவையான தேவ அழைத்தல் கரிசனையோடு கண்காணிக்கப்படும்படியாக மன்ருடிக்கொள்வது.

* * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பக்கம்

# பாடசாலைகளில் சமயபாடம்

**பாடசாலைகளில் சமயபாடம் கற்பித்தல் சம்பந்தமாக அண்மையில் தலைமை ஆசிரியர்களுக்கு வித்தியா பகுதி சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளார்கள். அதில் பின்வரும் விஷயங்கள் குறிக்கப் பட்டுள்ளன:**

உதவிபெறாத, தனிப்பட்ட பாடசாலைகளைத்தவிர மற்றப் பாடசாலைகள் அனைத்திலும் சமயபாடத்தைக் கட்டாயமாகப் போதிப்பதற்குக் கல்வி இலாகா முடிவுசெய்துள்ளது.

தற்போது சமயபாடம் போதிப்பது சம்பந்தமாகப் பின்வரும் விதிகள் நடைமுறையில் உள்ளன.

(i) தந்தை, அல்லது தாயினது மதமே ஒரு பிள்ளைக்கும் போதிக்கப் படும்.

இது பின்வரும் முறையில் நிர்ணயிக்கப்படும்.

பிள்ளையின் தந்தை ஏதாவது ஒரு மதத்தைத் தனது மதமெனப் பிரகடனம் செய்திருந்தால் அதுவே பெற்றோரின் மதம்எனக் கருதப்படும். தந்தையினால் அத்தகைய பிரகடனம் ஏதாவது செய்யப்படாவிட்டும் தாய் அத்தகைய ஒரு பிரகடனத்தைச் செய்திருந்தாலும், தாயின் பிரகடனத்தில் குறிப்பிட்ட மதமே பெற்றோரின் மதம் எனக் கொள்ளப்படும்.

**(ii) கல்வி அதிபரினாலும் குறித்த மதத்தைப் பின்பற்றுபவர் ஒருவரினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆசிரியரே சமய பாடத்தைப் போதிப்பார்.**

(iii) பிள்ளையின் பெற்றோரது மதத்தைத் தவிர வேறு எந்த மதமும் அப்பிள்ளைக்குப் போதிக்கப்படக்கூடாது.

(iv) குறித்த ஒரு மதத்தைச்சார்ந்த பிள்ளைகள் குறைந்தது பதினைந்து பேராவது இல்லாவிட்டால், அம்மதத்தைப் போதிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வது கட்டாயமானதல்ல.

பல்வேறு மதங்களைச்சார்ந்த பிள்ளைகளின் எண்ணிக்கைகள், சமயபாடங்கள் போதிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்றவற்றைப் பற்றி மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அதிபர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து வித்தியாபகுதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலை அதிபர்களுக்குப் பின்வரும் சுற்றுநிருபமும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதென்று பத்திரிகை (தினகரன் 24-3-61) கூறுகின்றது.

ஒரு குறிப்பிட்ட மதத்தைச்சேர்ந்த குறைந்தது பதினைந்துபிள்ளைகள் இருப்பின் மே இரண்டாம் திகதியிலிருந்து குறிப்பிட்ட அம்மதம் போதிக்கப்படவேண்டும். பெற்றோரின் மதம்மட்டுமே பிள்ளைகளுக்குப் போதிக்கப்படவேண்டும்.

வித்தியாபகுதியினால் அங்கீகரிக்கப்பட்ட, மதத்தில் போதிய அறிவு ஆற்றல் உள்ள ஆசிரியர்மட்டுமே சமய பாடத்தைப் போதிக்கவேண்டும்.

**வேதனமெதுவுமின்றிச் சமய பாடத்தைப் போதிக்கப் பிக்குகள், அல்லது மதகுருமார் விருப்பம் தெரிவிக்கின் அவர்களின் அந்தஸ்து, தராதரம் பற்றிப் பாடசாலை அதிபர்கள் கல்வி இலாகாவுக்கு அறிவித்து வித்தியாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.**

சமயபாடத்தைப் போதிக்கத் தகுதியற்ற ஆசிரியரிடம் இப் பொறுப்பை விடக்கூடாது. நேரசூசியில் சமய பாடம் ஒருபாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளதால் பாடசாலை நேரத்தைவிட மற்ற நேரத்தில் சமய பாடத்தைப் போதிக்கவேண்டிய அவசியமில்லையென்று இலாகா கருதுகிறது. பாடசாலை நேரத்தைவிட மற்றநேரத்தில் சமய பாடத்தைப் போதிக்குமாறு எந்த ஆசிரியரையும் நிர்ப்பந்திக்கக் கூடாது.

மேற்படி இரு சுற்று நிருபங்களும் பாடசாலைகளில் மதபோதகம் சம்பந்தமாகச் சில முக்கிய பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளன.

அரசாங்கம் நடாத்தும் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அவர்கள் தழுவிவரும் மதத்தைப்பற்றிய போதனை அளித்தல் அவசியம்என்பதை மறுப்பார் எவருமில்லை ஆனால், பிள்ளைகளின் மதபோதனை சம்பந்தமான பொறுப்பு மதத்தலைவர்களுக்குரியதா, அன்றேல் வித்தியாதிபதிக்குரியதா என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரச்சினை. வித்தியாதிபதியின் சுற்றறிக்கையின் பிரகாரம் சமயபாட ஆசிரியர்களின் தகைமையைத் தீர்மானிக்கும் உரிமை பாடசாலைத் தலைமைஆசிரியருக்கும், கல்வி அதிபருக்குமே உண்டு என்று கூறப்படுகிறது. **மத குருக்களின் தகைமையைத் தீர்மானித்தல்கூடத் தலைமை ஆசிரியருக்கும், வித்தியாதிபதிக்கும் உரியதென்று கூறப்படுகின்றது!** இதை, ஓர் அரசாங்க அதிகாரி மதவிஷயத்தில் அத்துமீறிப் பிரவேசிக்கின்றார்என்று குறிப்பிடுதல் பொருத்தமாகும். மதபோதகம் பாடசாலைகளில் நடைபெறுதல் சம்பந்தமாக, பாடத்திட்டத்தைத் தீர்மானிக்கவோ, பாடப்புத்தகங்களைத் தயாரிக்கவோ, மதபோதகஞ்செய்யும் ஆசிரியர்களின் தகைமையைத் தீர்மானிக்கவோ அரசாங்க அதிபர் ஒருவருக்கு எவ்வித உரிமையுமில்லை. இந்த விஷயங்கள் மதத்தலைவர்களுக்கே சிறப்பாக உரியவை. எனவே, அவற்றை அவர்கள் பொறுப்பிலேயே விட்டுவிடுதல் நீதியும், நியாயமுமாகும்.

"கல்வி அதிபரினாலும், குறித்த மதத்தைப் பின்பற்றுபவர் ஒருவரினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒருஆசிரியரே சமயபாடத்தைப் போதிப்பார்" என்று கல்விஅதிபரின் சுற்றறிக்கை கூறுகின்றது. மதபோதக ஆசிரியர்கள் மதத்தலைவர்களின் அங்கீகாரமின்றி **"மதத்தைப் பின்பற்றும் ஒருவரின்"** அங்கீகாரத்துடன் மட்டும் பிள்ளைகளுக்கு மதபோதனை செய்வாராயின், வீண் குழப்பங்களும், கரைச்சல்களும் ஏற்படுமென்பது திண்ணம். ஈற்றில், மதபோதகம் பாடசாலைகளிலிருந்து நீக்கப்படுவதற்கு இது அடிகோலுவதாகவும் முடியும்.

கத்தோலிக்க ஆசிரியர்களைப்பொறுத்தளவில் மதபோதனை விஷயத்தில் திருச்சபையின் படிப்பினைகள் எவை என்பதை அவர்கள் நன்கு அறிந்திருப்பது அவசியமாகும். சுவிசேஷத்தைச் சகல சாதிமக்களுக்கும் போதிக்கும் அதிகாரத்தைக் கிறிஸ்துநாதர் திருச்சபைக்குமட்டுமே அளித்துள்ளார். (மத். 28 : 19). ஆகவே, கத்தோலிக்க மதபோதகத் தொண்டிற்கு ஆட்களை நியமிக்கும் உரிமையும் கடமையும் திருச்சபைக்குமட்டுமே உண்டு. இத் திருப்பணிக்குத் திருச்சபை போதகர்களின் தகைமையை ஆராய்ந்து அவர்களை நியமிக்கின்றது. சிறு பிள்ளைகளின் சமய போதகத்திற்குத் திருச்சபை முதல்முதல் கத்தோலிக்க பெற்றோரை[illegible]றது. கத்தோலிக்க பெற்றோர் தங்கள் பொறுப்பை நிறைவேற்றாதபட்சத்தில் தான் திருச்சபை தனது விசேஷ போதகர்களை நியமிக்கின்றது. இவர்களுள் குருப்பிரசாதிகள் முதலிடம் பெறுகின்றனர். ஒரு குருவானவர் தனது வேதசாஸ்திர கல்விப்பயிற்சியினால் கிறிஸ்துமதத்தைப் போதிக்க மற்றவர்களைப்பார்க்கிலும் கூடிய தகைமையும் ஆற்றலும் கொண்டிருக்கின்றார் இவருடைய தகைமை, ஆற்றலைப்பற்றித் தீர்மானம்செய்ய எந்தப் பாடசாலைத் தலைவருக்கோ, அரசாங்க அதிகாரிக்கோ எவ்வித உரிமையும் இல்லை. இந்த உரிமை திருச்சபையில் ஆயர்களாயிருக்கும் மேற்றிராணிமார்களுக்கே சொந்தமானதாகும். மத போதக விஷயத்தில் விசாரணைப்பங்குக் குருமாருக்கும் அவர்களுக்கு உதவிபுரியும் மற்றும் குருமாருக்கும் திருச்சபை சிறப்பான இடமளிக்கின்றது. இவர்கள் தங்கள் உத்தியோகப் பொறுப்பினால் திருச்சபையின் போதகத்தொண்டில் நெருங்கியமுறையில் பங்குபற்றுகின்றனர்.

பங்குக் குருமாருக்கு அநேக ஞான வேலைகள் இருப்பதால் சிறுபிள்ளைகளுக்கு ஞானஉபதேசம் கற்பிக்கும் பொறுப்புமுழுவதையும் அவர்கள் தாமாகவே செய்துமுடிக்க இயலாது. ஆகையால், சாதாரண கத்தோலிக்க மக்களும் வேதபோதகத் தொண்டில் ஈடுபடத் திருச்சபை உத்தரவளிக்கின்றது. ஆனால், இவர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பயிற்றப்பட்டவர்களாயிருக்கவேண்டும். ஆகவே, சமயபோதகத் தொண்டில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் திருச்சபையால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களா யிருக்கப் படவேண்டும். அத்தொண்டிற்கென, சிறப்பாகப் பயிற்றப்பட்டவர்களாயிருக்கவேண்டும். சமயபோதக ஆசிரியர்களின் தகைமையைத் தீர்மானிக்கத் திருச்சபை அதிகாரிகளாகிய மேற்றிராணிமார்களுக்கே பொறுப்பும் தனி உரிமையும் உண்டு. ஒரு சாதாரண கத்தோலிக்கருக்கு இது விஷயத்தில் எவ்வித உரிமையுமில்லை. ஆகையால், பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர் ஒருவர் கத்தோலிக்க பிள்ளைகளுக்கு மதபோதகம்செய்வதற்குத் தலைமை ஆசிரியரின் சிபாரிசோ, கத்தோலிக்க மதத்தைப்பின்பற்றும் ஒருவரின் அங்கீகாரமோ, வித்தியாதிகாரியின் அங்கீகாரமோ போதியதன்று: **மேற்றிராணியாரின் அங்கீகாரம் அவருக்கு இல்லைஎனில் கத்தோலிக்க பிள்ளைகளுக்குக் கத்தோலிக்க மதத்தைக் கற்பிக்கிறதற்குத் தாம் தகுதிவாய்ந்தவரென்று அவர் கருதவேமுடியாது.** "அரசாங்கத்தால் பொறுப்பேற்று நடாத்தப்படும் கத்தோலிக்க பாடசாலைகளில ஞானஉபதேசம கற்பிக்க விரும்பும் உபாத்திமார் கட்டளைக் குருமாரிடமிருந்து முறையான அதிகாரம்பெற்றுக்கொள்ளவேண்டும்" என்ற ஒழுங்கைத் திருகோணமலை ஆயர் அண்மையில் தமது மேற்றிராசனத்தில் ஏற்படுத்தியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகவே, கத்தோலிக்க ஆசிரியர்கள் பிரச்சினைமிகுந்த இவ் விஷயத்தில் திருச்சபையின் படிப்பினைகளையும், தங்கள் வேதக்கடமைகளையும் நன்கு உணர்ந்து நடந்துகொள்வார்களாக.

**— கத்தோலிக்க ஆசிரியன்.**


## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| பாலர்குறிப்பிடம் ... | 1-00 |
| சின்னக் குறிப்பிடம் ... | 75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| மாணவர் கிறிஸ்தவபோதகம் ... | 1-25 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) ... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-50 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-50 |
| ,, (தோல்) ... | 7-00 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 40 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| கிறீஸ்துவபோதகம் (Part I) ... | 1-25 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| பசாம் ... ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| மகா மனந்திரும்புதல் [illegible]பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ... | 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| நவதின உற்சவம் ... | 75 |
| தரும அப்பம் ... | 1-00 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

**வத்திக்கான் பொதுச்சங்கம்:** 1962-ம் ஆண்டில் பொதுச் சங்கம்கூடும் அளவிற்கு எல்லா முன்னேற்பாடுகளும் தடையின்றி, கால தாமதமின்றி நடந்தேறுமாறு இறைவனைக் கெஞ்சிமன்றாடுங்கள் என்கிருர் நம் தந்தை 23-ம் அருளப்பர். திட்டமிட்டபடி அடுத்த ஆண்டிற்குள்ளாகச் சங்கம்கூடுமோ, அல்லது தாமதமாகுமோ என்று தந்தை சற்றுக் கலங்குகிருர் என்பதுதெளிவு. அநேகமாக அடுத்த ஆண்டு டிசம்பரில்தான் சங்கம் ஆரம்பமாகும் என்று சொல்லப்படுகின்றது.

* * *

**அமெரிக்க இலட்சாதிபர் குருவானுர்;** அமெரிக்காவில் பல இலட்சம் டாலர்கள் சொத்துடைய தொழிலதிபர் திரு. கார்வன் ஜே. காவனுக் என்பவர், 18-3-61-ல் உரோமையில் குருப்பட்டம் பெற்ருர். கருதினல் த்ராலியா ஆண்டகை பட்டம் அளிக்கும் சடங்குநடத்தினுர். இப்புதுக் குரு 5 ஆண்டுகட்குமுன், தமது 48-வது வயதில் உலகத்தைத் துறந்து குருத்துவப் பணிக்காகத் தம்மைத் தயார்செய்யத் தொடங்கினுர். இலட்சக்கணக்கான டாலர்கள் சம்பாதித்து நிதிதிரட்டும் ஒரு செல்வந்தனைவிட, ஒருகுருவானவர் உலகிற்கு அதிக உபயோகமானவர் என்று அன்று அவர் உரைத்தார்.

* * *

**ருஷியாவுக்கு வத்திக்கான் உதவி:** இன்று ருஷியாவால் சதா வசைப்புராணம் பாடித் தாக்கப்பட்டுவரும் வத்திக்கான், அதே ருஷியாவுக்கு 1922—1924-ல் 1,240 டன் உணவுப்பொருட்களை இலவசமாகத் தந்து உதவியுள்ளது. முதல்உலகப் போருக்குப்பின் ருஷியாவில் பஞ்சமும், கொள்ளைநோய்களும் பலர்உயிரைப் பறித்துச்சென்றன. அந்த இக்கட்டான வேளையில் வண. எட்வாட் ஜெஹமான் என்ற குரு மாஸ்கோவில் தங்கியிருந்து, வத்திக்கானிலிருந்து உதவிபெற்று விநியோகம் செய்துவந்தார். உணவுமட்டுமன்றி, உடை, மருந்துவகை போன்ற இதரஉதவிகளும் செய்துவந்தார். அக்குரு சில நாட்களுக்கு முன் ஜெர்மனியில் போன் நகரில் தமது 72-வது வயதில் மரணமடைந்தார்.

* * *

## வேலூர் மேற்றிராசனத்தில் பத்திச்சபைகள் மாநாடு

கடந்த மாசிமாதம் 12-ம், 13-ம் திகதிகளில் வேலூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சகலபத்திச்சபைகளின் மாநாடு வெகுவிமரிசையாக நடந்தேறியது. வேலூர், தஞ்சாவூர் மேற்றிராணியாண்டவர்கள், 40 குருக்கள், 30கன்னியர்கள், 3500-க்குமேற்பட்ட விசுவாசிகள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். மாநாட்டின் இறுதியில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. **சிறுவர் சிறுமியர்கள் :** வாரந்தோறும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தல்; அடிக்கடி திவ்வியபூசைப் பலியில் பங்குபற்றி திருவிருந்தருந்தல்.

2. **ஆண்கள் :** கத்தோலிக்க பத்திரிகைகள் வாங்குதல்; ஒவ்வொருவர் வீட்டிலும் ஒருசுவிசேஷநூலை வைத்திருத்தல்; தீயபத்திரிகைகளை வாங்காது விடுதல்.

3. **பெண்கள் :** மாதாவின் மேல் விசேஷ பத்திகொள்ளுதல்; ஆடை அலங்காரம் செய்வதில் அடக்கஒடுக்கத்தை அனுசரித்தல்.

4. **பொதுத் தீர்மானம் :** மரியன்னையின் மாதா [illegible]த்தல்.

## புதுமுறைஉபதேசிமார்கள்

சத்திய திருமறைப் போதனையில் குருமாருக்கு வலக்கைபோலிருந்து உதவிசெய்துவரும் உபதேசிமாரின் நிலையைச் சீர்ப்படுத்தி உயர்த்துவதற்குப் புதுவை-கடலூர் அதிமேற்றிராணியார் ஓர் புதிய திட்டத்தை வகுத்துள்ளார். இத்திட்டத்தின் பிரகாரம் உபதேசிமார் முதல்தரம், 2-ம்தரமென இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் 18மாதப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு அவரவர் தரத்துக்கேற்ற தத்துவப்பத்திரம் (டிப்ளோமா) வழங்கப்படும்.

* * *

## பெரிய சிங்கராயரின் 15-ம் நூற்ருண்டு விழா

அர்ச். பெரிய சிங்காராயர் என்ற பாப்பாசர் மரணமடைந்து இவ்வருடம் 15 நூற்ருண்டுகள் நிறைவுறுகின்றன. அத்திலாஎன்பவன் தலைமையில் உரோமையைத் தாக்கிப் பிடிக்கவந்த மிலேச்சர்கள் இவரின் சொல்வன்மைமிகுந்த எதிர்ப்பைக்கண்டு மயங்கி, சாந்தமுற்று, வந்தவழியே திரும்பிச்சென்றனர். பதிதர்பலர் இவரது வன்மையான கண்டனத்துக்குள்ளாகினர். இவரது 15ஆம் நூற்ருண்டுவிழாவைச் சிறப்பிக்க, வத்திக்கான் அஞ்சல் நிலையம் அடுத்தமாதம் மூன்று புதிய தபால் முத்திரைகளை வெளியிடப்போகின்றது.

* * *

## உலக சுகாதார இயக்கமும் கத்தோலிக்க மதமும்

உலக சுகாதார இயக்கத்தின் பதினலாவது வருடாந்த மகாநாடு அண்மையில் புதுடெல்லியில் கூடியபோது மலேரியாத்தடுப்பு இயக்க நிதிக்காக ஜெர்மானிய கத்தோலிக்கர்களின் பேரால் அளிக்கப்பட்டுவந்த பணத்தொகை ஒரு லட்சம் டாலர்களாக அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. பரிசுத்த பாப்பரசரின் நன்கொடையாக ஆயிரம் டாலர்களைச் சமர்ப்பித்த ஹென்றி ரைட்மேற்றன் சுவாமியார் பரிசுத்த பாப்பரசர் இவ்விதமே ஒவ்வொரு நாட்டுக் கத்தோலிக்கரும் இந்த இயக்கத்துக்கு ஆதரவு அளிப்பதற்கோர் முன்மாதிரிகையாக இவ்வுதவியை அளித்தாரெனக் குறிப்பிட்டார்.

* * *

## கியூபா குழந்தைகள் ருஷியாவிற்கு அனுப்பப்படுகின்றனர்

கியூபாவிலிருந்து ஆயிரக்கணக்கான குழந்தைகள் ருஷியாவுக்குக் கப்பல் கப்பலாக ஏற்றி அனுப்பப்படுகின்றனர். அங்கு கொம்யூனிஸக் கல்விப்பால் [illegible]ண்டு, மூளையைப் பதப்படுத்திக்கொண்டு தம் நாடு திரும்புவர்! —இவ்வாண்டின் இறுதிக்குள் கியூபாவில் திருச்சபைக்குச் சொந்தமான 265 பள்ளிகள் அரசினரால் பறித்துக் கொள்ளப்படும். சாந்தியாகோ நகர் மேற்றிராணியாரையும், 'அவரது பிரமாணிக்கமுள்ள நாய்களையும்' (= குருக்கள்) உடனடியாகக் கப்பலேறி ஸ்பெயினுக்குத் திரும்பிப் போய்விடும்படி அறைகூவியிருக்கிருர் காஸ்திரோ.

## கொம்யூனிஸ்தரால் கொல்லப்பட்ட இளங் குருக்கள்

உரோமையில் பாப்பரசரின் விசுவாசப்பரப்புதல் குருமடத்தில் பயின்று குருப்பட்டம்பெற்று, இரும்புத்திரைக்குள்ளிருக்கும் தம் நாடுகளில் சேவை செய்யத்திரும்பிய இளங் குருக்களுள் 6 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். எஞ்சியவருள் பெரும்பாலோர் சிறையிலிருக்கின்றனர். அந்நாடுகளிலிருந்து புதிதாய்க் குருமாணவர் உரோமைக்குப் படிக்கவருவது அசாத்தியமாகிவிட்டது. இறுதியாக வந்த ஒரு மாணவர் தம் நாட்டிலிருந்து வெளியேற 10ஆண்டுகளாக முயன்றுபார்த்துவிட்டு, கடைசியில் யூகோஸ்லாவியா வழியாக ஆஸ்திரியாவுக்குத் தப்பியோடி, அங்கிருந்து உரோமைவந்து சேர்ந்தாராம்.

* * *

## சுதந்திர றுவாண்டாவில் திருச்சபை விருத்தி அடைந்து வருகின்றது

ஆபிரிக்காவின் புதிய சுதந்திர நாடாகிய றுவாண்டாவில் கத்தோலிக்க திருச்சபை உலகத்தின் வேறெந்த நாட்டிலும்பார்க்க அதி தீவிரமாக வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றது. சுவிசேஷ போதகர்கள் 1896-ம் ஆண்டில்தான் முதல்முறையாக இந்நாட்டில் கால் வைத்தனர். எனினும், இன்று கத்தோலிக்கரின் தொகை நாட்டின் முழுத்தொகையிலும் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாக இருக்கின்றது. இந்நாட்டில் வதியும் மக்களின் தொகை 2,385,000; கத்தோலிக்கரின் தொகை 815,546. நாட்டிலுள்ள 2 மேற்றிராசனங்கள் இப்போது சுதேச ஆயர்களால் ஆளப்பட்டு வருகின்றன. சுதேச குருக்களின் தொகையும் தீவிரமாகப் பெருகிக்கொண்டு வருகின்றது. நாடு சுதந்திரம் அடைந்ததினுல் திருமறையின் வளர்ச்சிக்குத் தடங்கல் ஏற்படுமோவென்று அஞ்சுவதற்கு காரணம் எதுவும் இல்லை. நாட்டின் சுதந்திரத்திற்காகக் கத்தோலிக்க திருச்சபையுமே உழைத்து வந்துள்ளது. இரு ஆண்டுகட்குமுன் றுவாண்டாவின் மேற்றிராணிமார் விடுத்த கூட்டு நிருபத்தில் "நாடு வேத அடிப்படையிலும், சமூக நீதி அடிப்படையிலும் சுதந்திர பாதையில் வழிநடத்தப்படவேண்டும்" என்று ஆட்சியாளரை வற்புறுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மகாராணியின் வத்திக்கான் தரிசனை

பிரிட்டிஸ்அரசி இரண்டாவது எலிசபெத், தமது கணவர் இளவரசர்பிலிப் சமேதராக அடுத்துவரும் வைகாசி மாதத்தில் இத்தாலிக்கு விஜயஞ்செய்யும்போது வத்திக்கான்சென்று பரிசுத்த பாப்பரசரையும் சந்திக்கவிருக்கிருர். எலிசபெத் அரசியார் வத்திக்கானுக்குச் செல்வது இது இரண்டாவது தடவையாகும். முதலாவது தடவையாகத் தாம் இளவரசியாகவிருந்த் போது அரசியார் வத்திக்கான் சென்றிருந்தார். அவ்வமையம் பன்னிரண்டாம் பத்திநாத தந்தை இளவரசியை வரவேற்று அரைமணித்தியாலங்கட்கு மேலாக உரையாடினுர். இவரே பாப்பரசரைத் தரிசிக்கும் மூன்ருவது பிரித்தானிய மன்னராவர்.

* * *

## "கருதினல் மேற்றிராணிமாரை" நியமிப்பதில் மாற்றம்

வியக்கத்தக்க பெரும் மாற்றங்களைத் துணிவுடன்செய்து வருபவர் இப்போதுள்ள பாப்பரசர் 23ஆம் அருளப்பர். 13-3-61-ல் விடுத்த ஒரு சுற்றறிக்கையில், உரோமையைச் சார்ந்த 7 சுற்றுப்புற மேற்றிராசனங்கள் சம்பந்தமாகப் பாரம்பரையான ஒரு பெரும் மரபை முற்றிலும் மாற்றியமைத்துள்ளார். கருதினல்மார்களுள் மூன்று பிரிவுகள் உண்டு. கருதினல் மேற்றிராணிமார், கருதினல் குருக்கள், கருதினல் தியாக்கோன்கள். 'கருதினல் மேற்றிராணிமார்' 6 பேர். அவர்களுள் முதல்வர் மேற்கூறிய 7 மேற்றிராசனங்களுள் இரண்டைக் கண்காணித்து வருகிருர்; மற்ற 5 பேர் ஆளுக்கொன்ருக மற்ற 5 மேற்றிராசனங்களை ஆண்டுவருகின்றனர். இவர்களுள் யாராவது ஒருவர் இறந்தால் 'கருதினல் குருக்கள்' என்ற பிரிவிலிருந்து பதவிவரிசையில் முதல்வராய் இருப்பவர் 'கருதினல் மேற்றிராணியார்' பிரிவுக்கு உயர்ந்து, இறந்தவரின் ஆட்சிப்பொறுப்பை ஏற்பார். இம்முறைப்படி 'கருதினல் மேற்றிராணிமார்' பதவிக்கு உயர்கிறவர்கள் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களாயிருக்கின்றனர். அதனுல் மேற்கூறிய மேற்றிராசனங்களின் ஆட்சியில் அடிக்கடி மாற்றம் ஏற்படுகிறது. அவற்றின் நலன் பாதிக்கப்படுகிறது. இக்குறையை நீக்க, இனித் தமக்கிஷ்டமான கருதினல்களைக் 'கருதினல் மேற்றிராணிமார்' பிரிவுக்கு உயர்த்தப்போவதாக, திருச்சபைச் சட்டத்தைப் பாப்பரசர் மாற்றியிருக்கிருர்.

—(—)—

## ஆபிரிக்காவில் திருச்சபை

| | | | |
|---|---|---|---|
| ஆபிரிக்காவிலுள்ள வேதபோதக நாடுகளின் தற்போதைய மொத்த மக்கள் தொகை | | ... | 180,378,000 |
| இதில் கத்தோலிக்கர் | | ... | 20,199,550 |
| ஞானஸ்நானம் பெறத் தயார் செய்பவர்கள் | | ... | 2,971,175 |
| குருக்கள் | | ... | 12,046 |
| மேற்றிராணிமார் (1961-ல்) | அதிமேற்றிராணிமார் — ஆபிரிக்கர் | ... | 8 |
| | அதிமேற்றிராணிமார் — அந்நியர் | ... | 4 |
| | மேற்றிராணிமார்கள் — ஆபிரிக்கர் | ... | 19 |
| | மேற்றிராணிமார்கள் — அந்நியர் | ... | 2 |
| | அப்போஸ்தொலிக்க விக்கார் | | 1 |
| | உதவி மேற்றிராணிமார் | ... | 10 |
| பெரிய குருமாணவர்கள் | | ... | 1,533 |
| சந்நியாச சகோதரர்கள் | | ... | 4,679 |
| கன்னியர்கள் | | ... | 21,409 |
| உபதேசிகள் | | ... | 81,823. |

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday April 8-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org